# தமிழ்ப் புதுவை

(இலக்கியக் காலாண்டிதழ்)

ஜூலை 2023

**16ஆவது உலகத் தமிழ்ப் பணபாட்டு**

**மாநாட்டு சிறப்பிதழ்**

**மொரிசியசு 24-26 செப்டம்பர் 2023**





டாக்டர் ஆறுமுகம் பரசுராமன்




பொன்னம்பலம் தேவராஜ்



மு. முகமது அப்துல்லா



கார்த்திகேய சிவ சேனாபதி



பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்



வழக்கறிஞர் அமுது. இளஞ்செழியன்



திரு. மாவை. சோ. சேனாதிராஜா



பேராசிரியர் மங்களேஸ்வரன்




## மொரிசியசு மாநாட்டிற்கு அழைத்து மகிழும்

THE INTERNATIONAL TAMIL DIASPORA ASSOCIATION MAURITIUS

பன்னாட்டுப் புலம் பெயர்ந்தோர் தமிழர் சங்கம், மொரிசியசு

INTERNATIONAL THIRUKKURAL FOUNDATION

பன்னாட்டு திருக்குறள் மன்றம் மொரிசியசு

ஒன்றுபட்டால் வெல்வோம்

முருகன் பவுண்டேசன் மொரிசியசு

சுவடி -6 சொல் -2

தமிழ்ப் புதுவை

(இலக்கியக் காலாண்டிதழ்)

சூலை 2023

❑

சிறப்பாலோசகர்

**ந. நல்லுசாமி**

(முன்னாள் தமிழக அமைச்சர்)

மாவை. **சோ. தங்கராசு**

செர்மனி

❑

காப்பாளர்

பல்கலைவாணர் **ந. ராமதாஸ்**

❑

சிறப்பாசிரியர்

பேராசிரியர் **பாஞ். இராமலிங்கம்**

❑

ஆசிரியர்

கவிஞர் **முகவை முத்து**

❑

இணை ஆசிரியர்

முனைவர். **இரா. விசாலாட்சி**

❑

ஒளி அச்சு

**பிளாட்டினம் கிராபிக்ஸ்**

புதுச்சேரி

❑

அச்சாக்கம்

**பிரிண்ட் பிராசஸ்**

சென்னை

❑

செயலகம்

**தமிழ்ப் புதுவை**

17, 14ஆவது தெரு, கிருஷ்ணா நகர்,
புதுச்சேரி - 605008

Email: tamilpuduvai@gmail.com

Mob: 8903344025

சந்தா விபரம்

ஆண்டு: ரூ. 150/-

வாழ்நாள்: ரூ. 1,000/-

**தேச தேகம் எங்கும் சிந்தனைத் தீக்குழம்பால்**
**சந்தனம் பூசப்படும்வரை எழுது.**




## தொலைதூர நாடுகளில் வாழும் சொந்தங்களே!

பெருமைக்குரிய பேராசிரியப் பெருந்தகை, நமது சிறப்பாசிரியர் பாஞ். இராமலிங்கம் ஏடு நடத்துகிறார் என்றால்....

காசு பணம் பார்த்துக் கல்லாக்கட்ட வேண்டுமென்ற நினைப்பில் அல்ல. அப்படி நினைத்திருந்தால், அதற்கு இப்படி ஓர்ஏடா?

ஒவ்வொரு ஏடும் வெளிவரும்போது, தன் உழைப்பில் பெற்ற ஊதியத்திலிருந்து, இந்த ஏட்டிற்காகச் செல விடுகிறார்!
சரியாகச் சொல்லவேண்டுமானால், செலவு செய்வதல்ல, செலவு அழிக்கச் செய்கிறார்!

இதையெல்லாம் நம் வணக்கத்திற்கு உரிய வாசகப் பெருமக்கள் சிந்திக்க வேண்டும்!

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கதின் பாதையில் தன்பங்களிப்பை சமர்ப்பிப்பதே இந்த ஏட்டின் இலட்சியம் என்றால்..

அவருக்கு ஏற்படும் சுமையைக் குறைப்பதில், நமது வாசகரின் சேவையை வரவேற்கவே இதை எழுதுகிறேன்!

தொலைதூர நாடுகளில் வாழும், என் தொப்புள்கொடி சொந்தங்களே!

நீங்கள் தரும் ஆதரவோடு, உங்கள்பணி நிறைவ டைந்து விடுவதில்லை. கடல்கடந்த நம் இனத்தார் கையிலெல்லாம் இந்த ஏடு இடம்பெறவேண்டும்!

அவர்கள் வாழும் நாடுகளில் வாழும் நம்மவர் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளையும், அவர்களைத் தமிழராய் வழிநடத்தும் அமைப்புகள் பற்றிய செய்திகளையும் அனுப்பிவையுங்கள்!

நீங்கள் படைப்பாளியாக இருந்தால் உங்கள் எழுத்துகளையும் எதிர்பார்க்கிறோம்!

என் சொந்தங்களே! பேராசிரியப் பெருந்தகை பாஞ். இராமலிங்கம் அவர்களின் சுமைகளைப் பகிர்ந்துகொள்ளும் சுமைதாங்கி யாக மாற, உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கிறேன்!

சொந்தங்களே! துணைநிற்க வருக! வருக!

**ந. ரங்கசாமி**
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

सत्यमेव जयते

பாண்டிச்சேரி

தேதி : 29.06.2023

# வாழ்த்துரை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலண்டன் தலைமையகம், பன்னாட்டுப் புலம்பெயர்ந்தோர் தமிழர் சங்கம், பன்னாட்டுத் திருக்குறள் மன்றம், மற்றும் முருகன் அறக்கட்டளை, மொரிசியசு இணைந்து மொரிசியசில் 16 ஆவது பன்னாட்டு மாநாடு 2023 செப்டம்பர் 24 -26 நாட்களில் நடத்துவதை அறிந்து மகிழ்ந்தேன்.

இம்மாநாடு தொடர்பாக என்னை நேரில் சந்தித்த மொரிசியசு முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் பரசுராமன் அவர்களின் மூதாதையர் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் என்றும் அட்டர்னி தேவராஜ் பொன்னம்பலம் அவர்களின் மூதாதையர் புதுச்சேரியைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டனர், புதுச்சேரிக்கும் மொரிசியசுக்கும் 1728 ஆம் ஆண்டு முதல் தொடர்பு உள்ளதை அறிந்து மகிழ்ந்தேன்.

தற்பொழுது மொரிசியசு மாநாட்டின் போது புதுச்சேரியில் இருந்து 1728ல் முதன்முறையாக குடியேறிய தமிழர்கள் நினைவாக நினைவு சின்னம் மொரிசியசில் ஏற்படுத்துவதும், அதேபோன்று புதுச்சேரியில் நினைவு சின்னம் ஒன்று ஏற்படுத்துவதும் வரலாற்று சிறப்புமிக்கதாகும்,

ஐம்பதாம் ஆண்டில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் நடைபெறும் இம்மாநாட்டில் 31 நாடுகளில் இருந்து 300 பேராளர்கள் பங்கேற்பதும் புதுச்சேரியில் இருந்து 25 பேராளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளதும் பாராட்டிற்குரியது. உலக அளவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இம்மாநாட்டு ஆய்வரங்கில் விரிவாக விவாதித்து தீர்வு காண முயற்சிப்பது தமிழர் மேம்பாட்டில் ஒரு மைல் கல்லாகும்.

புதுச்சேரியில் இருந்து புலம்பெயர்ந்து மொரிசியசு, செசல்ஸ், ரீயூனியன், மார்த்தினிக் போன்ற நாடுகளில் இருந்து தமிழ் ஆராய்ச்சியாளர்களும், ஆர்வலர்களும் பங்கேற்கும் இம்மாநாடு புதுச்சேரியுடன் உள்ள தொடர்புகளை மேலும் வலுப்பெற செய்யும் என்றால் மிகையல்ல.

உலகம் தழுவி நடைபெறும் இம்மாநாடு சிறப்புடன் நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

(ந . ரங்கசாமி )

அலு. : 2333399, 2335530, 2335328, 2335522 தொலை நகலி : 0413 - 2333135
இல்லம் : 2271232

**செல்வம் .R**
**சட்டப்பேரவைத் தலைவர்**
**புதுச்சேரி சட்டப்பேரவை**
**புதுச்சேரி**

सत्यमेव जयते

அலுவலகம் : 0413-2232200
2338373
2223695
கைபேசி : 98434 44799
மின்னஞ்சல் : spkr.pon@nic.in



26.05.2023

## வாழ்த்துச்செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 16வது பன்னாட்டு மாநாடு கடல்சூழ் எழில்மிகு மொரிசியஸ் நாட்டில் நிகழ்வது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. உலகெங்கும் வாழும் தமிழர்கள், தமிழறிஞர்கள் ஒன்று கூடுவதும், கலந்துரையாடி கண்டுமகிழ்ந்து, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பண்பாடு, மொழி உணர்வு, கலை உணர்வு போன்றவற்றை ஆராய்ச்சி செய்து அவற்றை உலகறியச் செய்யும் மாண்பு போற்றி பாராட்டக் கூடியதாகும்.

தமிழ்ப்பண்பாடு ஆட்சி, அரசியல், அதிகார ஆளுமை போன்றவற்றால் பல்வேறு காலங்களில் தமிழர் உலகெங்கும் பரவி வாழ்ந்ததாலும், ஆங்கிலேயர், பிரஞ்சியர் காலத்தில் தமிழகம், புதுச்சேரியில் இருந்து பல்வேறு நாடுகளுக்குப் பரவிய தமிழர்கள் சென்ற இடங்களில் எல்லாம் தம் பண்பாட்டை நிறுவினர், நிலைக்கச் செய்தனர். அம்மரபுச் சார்ந்தோர் இன்றளவிலும் தமிழ் மொழிப் பண்பாட்டு வாழ்க்கை முறையைக் கடைபிடித்து வாழுகின்றனர்.

உலக மூத்தமொழிகளில் ஒன்றான தமிழ்மொழியும் அதன் பண்பாடும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றைப் பெற்று இன்றும் இளமை குன்றாத மொழியாக வலம் வருவதும் தமிழர் என்ற முறையில் நமக்கெல்லாம் பெருமை தருவதுமாக அமைகின்றது. பேராசிரியர் முனைவர் திரு. பாஞ். இராமலிங்கம் தலைமையிலான மாநாட்டுக்குழு மொரிசியஸ் மாநாட்டில் வெற்றிவாகை சூடவும் மாநாட்டை நடத்தும் மொரிசியஸ் முன்னாள் கல்வியமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் அவர்களுக்கும் நன்றி கலந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

அன்புடன்,

26/5/23

**(செல்வம். R)**
**சட்டபேரவைத்தலைவர்**

**4, விக்டர் சிமோனல் வீதி, புதுச்சேரி-605 001**

**க. லட்சுமிநாராயணன்,** B.Sc., B.L.
**அமைச்சர் பொதுப்பணி,**
சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமான போக்குவரத்து, மீன்வளம் மற்றும் மீனவர் நலம், சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைகள்
புதுச்சேரி அரசு

சத்யமேவ ஜயதே

✆ அலு. : 0413-2335279
2232254
வீடு : 0413-2338181
2220666
கைபேசி : 94432 38181
எண் 95, பெருமாள் கோயில் வீதி
புதுச்சேரி-605 001
மின்னஞ்சல் : lakshminarayananpdy@gmail.com



## 16-வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டிற்கான வாழ்த்துச் செய்தி

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும், மொரிசியசு பன்னாட்டு புலம் பெயர் தமிழர் சங்கமும், மொரிசியசு முருகன் கோவில் அறக்கட்டளையும் இணைந்து மொரிசியசில் நடத்தும் 16-வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கான முயற்சிகளை எடுத்து வரும் மாநாட்டு அமைப்பாளர்களுக்கு என் பாராட்டுகளை புதுச்சேரி அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சிக்கான குறிக்கோளை அடைந்து, 16-வது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடும் வழக்கம் போல வெற்றி பெற வாழ்த்துகிறேன். இது போன்ற மாநாடுகளும், கருத்தரங்கங்களும் "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற உலகப்பண்பாட்டை முதன்முதலில் தோற்றுவித்த கணியன் பூங்குன்றனாரின் வார்த்தைகளுக்கு வடிவம் கொடுக்கின்ற முயற்சியே என்று நமக்கு புரிய வைக்கின்றன.

இயந்திர வேகத்தில் இயங்கும் உலகத்தில், அசுர வளர்ச்சியில் வளரும் பொருளாதாரத்தில், வாழ்வின் பேரிரைச்சலில் ஒரு மொழியின் ஆக்கமும், தாக்கமும், தாக்கமும், இனத்தின் இனத்தின் பண்பாடுகளும் காணப்படாமல் போகின்ற ஆபத்தில் புலப்படாமல் போகின்ற நிலை இருக்கிறது. அதனால், இதுபோன்ற மாநாட்டாளர்களின் முயற்சியே ஓரளவிற்கு நமது மொழியை, பண்பாட்டை, அடையாளத்தை இழக்காமள் தொடா; காக்க, உதவ முடிகிறது! என்பதே திண்மை.

இதற்காக முன்னின்று முயற்சி எடுக்கும் மொரிசியசு நாட்டின் முன்னாள் கல்வி அமைச்சர் தமிழறிஞர். திரு.ஆறுமுகம் பரசுராமன் அவர்களை மனமுவந்து பாராட்டுகிறேன். தாய்

மண்ணின் பெருமையை தான் சார்ந்த மண்ணிலும், தமிழ்ப் பண்பாட்டு பெருமைகளை விண் முட்டும் அளவிற்கு எடுத்துச் செயல் வடிவம் தரும் எண்ணத்தை வியக்கிறேன்.

தமிழகத்தையும், புதுச்சேரியையும் தமிழ்ப் பண்பாட்டின் இருகண்களாக பாவித்தும், புதுச்சேரிக்கும் மொரிசியசுக்கான தமிழ்மொழி பண்பாட்டு இணைப்புகள் பற்றி மட்டுமின்றி, பிரெஞ்சு தமிழர் பண்பாட்டின் இணைப்பினையும் சேர்த்து இந்த மாநாட்டின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டு வர வழி செய்தமைக்கு மிக்க நன்றி.

இம்மாநாட்டில் 28 நாடுகளைச் சார்ந்த தமிழ் அறிஞர்கள் நமது சமூகம் எதிர் கொள்ளும் சமூக மொழி பண்பாட்டு சிதைவுகள், வளர்ச்சிகள், சவால்கள் ஆகியவைப்பற்றி அளிக்க உள்ள கட்டுரைகள் நம் தமிழர், தமிழ்மொழிப் பண்பாட்டு விழைவுகளை பாதுகாக்க பயன்படும் என உறுதியாக நம்புகிறேன்.

நவீன மயமாக்கல் என்கின்ற கால ஓட்டத்திற்கு எதிராக எதிர் நீச்சல் போட்டு பண்பாட்டை பாதுகாக்கும் உங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துக்கள்.

நன்றி.

**இப்படிக்கு,**

**(க. லட்சுமிநாராயணன்)**
**பொதுப்பணித்துறை அமைச்சர்**

पांडिच्चेरी विश्वविद्यालय
PONDICHERRY UNIVERSITY
(केंद्रीय विश्वविद्यालय) (A Central University)

பேராசிரியர் குர்மீத் சிங்
துணைவேந்தர்
आचार्य गुरमीत सिंह
कुलपति
**Prof. GURMEET SINGH**
Vice-Chancellor

आर.वेंकटरामन नगर,
R. Venkataraman Nagar,
कालापेट / Kalapet,
पुदुच्चेरी -६०५ ०१४.
Puducherry - 605 014.
भारत. India.

June 24, 2023

## MESSAGE

I am happy to note that the International Movement for Tamil Culture (IMTC), London Headquarters, in collaboration with the International Association of Tamil Diaspora (INTAD), Murugan Foundation, and International Thirukkural Foundation, Mauritius jointly organizing its 16th IMTC International Conference on International Tamil Diaspora – Opportunities and Challenges on 24th and 26th September 2023 at the University of Mauritius.

Tamil, as a classical language, boasts of a rich cultural heritage that is unparalleled. The upcoming conference aims to enlighten scholars and delegates alike about the cultural ethos and research contributions of Tamil literature. Attendees can expect to gain a deeper understanding of this language and its invaluable contributions to the world.

As an academician, I believe that the upcoming conference sessions should prioritize the most crucial aspects of recent developments in Tamil cultural research related to Tamil diaspora spread across the world, as well as the ancient contributions found in literature. The keynote addresses, special lectures, invited talks, and scientific sessions all seem to be thoughtfully designed to promote awareness among young researchers and encourage cross-cultural studies across various countries.

I congratulate the team of organizing committee of the conference for successful conduct of the events for three days in Mauritius.

Wishing them all the best

**(GURMEET SINGH)**

Tel. : +91-0413-2655175 (Off.); 2656454 (Per.); Fax : (0413) 2655033; Email: vc@pondiuni.edu.in

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
# International Movement for Tamil Culture
இலண்டன் தலைமையகம் / London Headquarters
Non-profitable Organisation / இலாப நோக்கற்ற அமைப்பு
Incorporation Number in UK. 12673950
10 Palmerston Road, Harrow, Middlesex, HA3 7FA, United Kingdom.
Web : www.imtc.uk Email: imtccanada@gmail.com Tel. 00442084225892



டாக்டர் தாவிதன்னுசாமி
மேநாள் நீதியரசர், சென்னை உயர்நீதிமன்றம்
தலைமைக் காப்பாளர்,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
இலண்டன் தலைமையகம்


## வாழ்த்துரை

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பொன்விழா கொண்டாடப் படுவதுடன் 16ஆவது பன்னாட்டு மாநாடு மொரிசியசு நாட்டில் நடைபெறவுள்ளது மகிழ்வான செய்தி.

நான் கடந்த எட்டு ஆண்டுகளாக தலைமைக் காப்பாளராக இருந்து இவ்வியக்கத்தின் அபரிமிதமான வளர்ச்சி மற்றும் சேவைகளை அறிவேன். பல நாடுகளில் இவ்வியக்கம் சிறப்பாக நடைபெறுகிறது. குறிப்பாக, இந்தியா, இலங்கை, மலேசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழர்களின் நலன் பேணும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது தமிழ்ப் பழமொழி அதற்கு செவி சாய்த்து தமிழர்கள் காலம் காலமாக பல நாடுகளுக்கு சென்று பல சேவைகளைச் செய்து வாழ்ந்து வருகிறார்கள் முதலாம் உலகப் போருக்கு முன் சென்றவர்கள் மொழியை மறந்து விட்டார்கள் ஆனால் தமிழ்ப் பெயர் சூட்டப்பட்டிருப்பதில் ஆனந்தம் அடைவார்கள். அதற்குப்பின் சென்றவர்கள் பலர் தமிழ் மேல் பற்று பெருகி அதை வளர்க்க முயற்சித்து வருகிறார்கள் முயற்சி ஒரு இயக்கமாகவும் உருவெடுத்து சேர்ந்து வளர்ந்து வருகிறது.

தமிழ்நாட்டிலும் இலங்கை மற்றும் மலேசியாவிலும் உள்ள தமிழர்களோடு இணைந்து இந்த இயக்கம் மிக வலிமையாக சிறப்பாக வளர்ந்து விட்டது. உலகத்தின் பல நாடுகளில் பரவி தமிழறிஞர்கள் இடையே ஒன்று கூடி மாநாடு நடத்தி தமிழ்ப் பண்பாட்டைச் செழிக்கச் செய் கிறார்கள். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக மொரிசியசு நாட்டில் 16ஆவது மாநாடு நடைபெறுவது மொரிசியசு மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதோடு தமிழ் உணர்வைத் தூண்டிவிடும். தமிழர்ப் பண்பாட்டை மேலோங்கச் செய்யும்

சிரமம் பாராமல் இத்தகய மாநாட்டை எடுத்து நடத்தும் புதுச்சேரி பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் மற்றும் மொரிசியசு முன்னாள் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் மற்றும் அவர்களுக்குத் துணை நிற்கும் அனைவருக்கும் மிக்க நன்றி

எப்பொழுதும் எங்கெங்கும் தமிழர் வாழ்கவே! தமிழ் வளர்கவே!

27-5-2023

தாவிதன்னுசாமி

யாழ்ப்பாணம்
18.06.2023

## சர்வதேச தமிழ்ப்பண்பாட்டு மாநாடு மொரிசியஸ் - 2023
## வாழ்த்துச் செய்தி

16ஆவது சர்வதேச தமிழ்ப் பண்பாட்டு மாநாடு மொரிசியஸ் நாட்டில் 24-26.09.2023ல் நடைபெறுவது அறிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சர்வதேச பண்பாட்டு மாநாட்டின் இரண்டாவது மாநாடு 1980ல் மொரிசியஸ் நாட்டில் நடைபெற்றதையும் நினைவு கூருதல் வேண்டும். இம் மாநாட்டை இம்முறையும் நடாத்துவதற்குப் பொறுப்பேற்றுள்ள மொரிசியஸ் நாட்டு முதலமைச்சர், அமைச்சரவை உறுப்பினர்களுக்கும், மாநாட்டு விழாக்குழுவுக்கும் இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்முறையும் நடைபெறும் மாநாட்டிலும் பல நாடுகளிலும் வாழும் தமிழர் பிரதிநிதிகளும் மொழி, பண்பாடு, ஆராய்வுத்துறை வல்லுநர்களும் பங்குகொள்வார்கள். மொரிசியஸ் நாட்டு அரசின் பு+ரண ஒத்துழைப்புடன் நடைபெறும் இம் மாநாட்டில் தமிழர் வரலாற்று தொல்லியல் ஆராய்வுகள் முக்கியத்துவம் பெற வேண்டியது பிரதானமான இடத்தைப் பெறும் என நம்புகிறோம்.

உலகில் தமிழர் வரலாற்றை, பண்பாட்டின் செழுமையை நிறுவி நிற்கக் கூடிய தொல்லியல் ஆய்வுகள் முழுமை அடையவில்லை. அறிவியல் பெருமளவில் வளர்ச்சியடைந்துள்ள நிலையில் இந்தியாவும் குறிப்பாக தமிழ்நாடு அரசும் முன்னணி வகிப்பது போன்று அறிவியல்துறையில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் வாழும் பல துறை வல்லுனர்கள் தமிழர் பண்பாடு, நாகரீகத்தை தொல்லியல் ஆய்வு அடிப்படையில் நிறுவ வேண்டும். தமிழர்கள் உலகில் நாற்பத்திரண்டு நாடுகளிற்கும் மேலாக வாழ்ந்து வருகிறார்கள். ஆட்சியில் அங்கம் வகிக்கிறார்கள்.

இலங்கையில் தமிழர் தேசம், தமிழினம், தமிழர் நாகரிகம், தமிழர் வரலாறு என்பனவும் பௌத்த சிங்கள ஆட்சிகளினால் அழிக்கப்பட்டு வருவதை தடுத்து நிறுத்த வேண்டியதும் அவசியமாகி விட்டது என்பதும் மாநாட்டின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற வேண்டுமென வற்புறுத்துகின்றேன். தமிழர்களுடைய பண்பாடு, நாகரிகம் ஐயாயிரம் ஆண்டுகளையும் கடந்தது. சிந்துவெளி நாகரிகம், இந்துமா சமுத்திரப் பிரதேசத்திலும் பரந்து நிலைத்தது என்பதை ஆய்வுகள் மூலம் நாம் நிலைநாட்ட வேண்டும்.

இம்முறை நடைபெறும் மாநாட்டிலும் நிகழ்ச்சி நிரலிலும் தமிழர் நாகரிகத்தின் அடித்தளங்களை ஆழ ஆராய்வதற்கும், நிலை நிறுத்துவதற்கும் சர்வதேச அளவில் ஐ.நா அமையத்தினூடாகவும் (UNESCO) நிறுவன அமைப்பு ஒன்று நிறுவப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஒவ்வொரு மாநாட்டிலும் அடையும் முன்னேற்றங்களையும் மதிப்பீடு செய்ய வேண்டும். அந்த மதிப்பீடுகளின் முன்நேற்றங்கள் அதன் இலக்கை நோக்கித் தொடர வேண்டும். அதற்கான நிரந்தரமான ஆய்வு மையம் நிறுவப்பட வேண்டும். அதற்கான நிதி திரட்டப்படுவதற்கு அனைத்து நாடுகளிலும் வேண்டிய நிறுவன ஒழுங்கு அரசுகள் மூலம் நிறுவப்பட வேண்டும். அதற்கும் நாம் இம்முறை மாநாட்டில் பொருத்தமான தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும். அதற்கான தீர்மானமொன்றை மாநாட்டில் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

பதினாறாவது சர்வதேசப் பண்பாட்டு மாநாடு சிறப்புறவும், வெற்றிபெறவும் வாழ்த்துகின்றேன்.

**மாவை. சோ. சேனாதிராசா**
மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர்
இலங்கை

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
## International Movement for Tamil Culture
இலண்டன் தலைமையகம் / London Headquarters

Non-profitable Organisation / இலாப நோக்கற்ற அமைப்பு

Incorporation Number in UK. 12673950

10 Palmerston Road, Harrow, Middlesex, HA3 7FA, United Kingdom.

Web : www.imtc.uk Email: imtccanada@gmail.com Tel. 00442084225892



மாவை சோ. தங்கராஜா

ஆலோசகர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், ஜெர்மனி


## வாழ்த்து

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் எதிர்வரும் ஆண்டில் போன் விழா காண உள்ளது. இது மகிழ்வான செய்தி. நான் 2014 ஆண்டு தொடக்கம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் ஆலோசகராக பொறுப்பேற்று திறம் பட செலாற்றியுள்ளேன். குறிப்பாக தோய்ந்து பிளவுபட்டு கிடந்த இயக்கத்தை முன்னெடுக்க நானும் என் அண்ணரும் புதுச்சேரிக்கு மற்றொரு பணியின் காரணமாக சென்றபோது பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் அவர்களைச் சந்தித்தோம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தற்போதைய நிலைமை கவலைக்குரியதாக உள்ளதை எண்ணி அவரை புதுச்சேரி ஒரு சிறப்பு மாநாடு ஏற்பட்டு செய்திட கேட்டுக்கொண்டோம். அவரும் மறுப்பேதும் கூறாமல் தமது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் 2015 சனவரி மாதம் 15 - 16 தேதிகளில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்பு மாநாட்டினை ஏற்பாடு செய்தார். அம்மாநாட்டு சிறப்புப் பேரவைக் கூட்டத்தில் இயக்கத்தின் 13ஆவது பன்னாட்டு மாநாட்டினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2017 ஆகஸ்டு மாதம் 4 - 5 திகதிகளில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. அவரை மாநாட்டுத் தலைவராக நியமித்து சிறப்பானதொரு மாநாட்டினை தாய்மண்ணில் நடத்தினோம்.

அம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டபடி செயற்குழு மாற்றிஅமைக்கப்பட்டு புதிய விதிமுறைகள் அங்கிகரிக்கப்பட்டது. அதனை கனடா நட்டு பதிவகத்தில் பதிவும் செய்யப்பட்டது. ஆனால் தமிழருக்கே உரிய பொறாமை மற்றும் இயக்கத்தின் செயல் பாட்டிற்கு ஈடு கொடுக்க முடியாமல் இயக்கத்தின் பணிகள் தேக்கம் கண்டன. பெரும்பாலான செயற்குழு உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப சுவிசர்லாந்து நாட்டின் பசல் நகரத்தில் சிறப்புச் செயகுழுக் கூட்டம் கூட்டப்பெற்று புதிய செயற்குழு சட்டத்தரணி அமுது. இளசெழியன் தலைமையில் அமைக்கப்பெற்று 2020 பிப்ரவரியில் புதுவைப் பல்கலைக்கழகத்தில் 3ஆவது பன்னாட்டு மாநாட்டினை 2020 ஆகஸ்டு மாதம் 4 - 5 திகதிகளில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் அவர்களையே மீண்டும் மாநாட்டுத் தலைவராக நியமித்து சிறப்பானதொரு மாநாட்டினை நடத்தினோம். 15ஆவது பன்னாட்டு மாநாட்டினை தெள்ளார் ராஜா நந்திவர்மன் காலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2022 அக்டோபர் 6 மற்றும் 7 திகதிகளில் சிறப்புற நடத்தினோம்.

இயக்கத்தின் செயல்பாடுகள் கல்வி நிலையங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெறுகிறது. இந்த ஆண்டு மொரிசியசு நாட்டில் செப்டெமெப்ர மாதம் 24-26 திகதிகளில் 16ஆவது மாநாடு ஏற்பட்டு செய்யப்பட்டுள்ளது. நான் ஆலோசகராக இருந்து இவ்வியக்கம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் நன்றி பாராட்டி மாநாடு சிறப்புற நடைபெற வாழ்த்துகிறேன்.

வாழ்கத் தமிழ்! வளர்க தமிழர் பண்பாடு !! ஓங்குக தமிழர் ஒற்றுமை!!!

**மாவை சோ. தங்கராஜா**

ஆலோசகர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

ஜெர்மனி

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் – பொன் விழா விழாவினை நோக்கி (1974 - 2023)

பேராசிரியர் **பாஞ். ராமலிங்கம்**
புதுவைப் பல்கலைக்கழகம் புதுச்சேரி
இயக்குநர், மனிதவள மேம்பாட்டு உயர்ப் பயிற்சி நிறுவனம், புதுச்சேரி
சிறப்புத் தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இலண்டன் தலைமையகம்

உலகத் தமிழ் இனத்தை மொழியாலும் பண்பாட்டாலும் ஒருங்கிணைக்கும் உயர் நோக்குடன் தமிழர் வாழும் இடங்களில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்னும் குறிக்கோளுடனும் அரசியற்சார்பற்று இன மத பேதங்களைக் கடந்து தமிழ்ப் பண்பாட்டாளர் என்னும் ஒரே நோக்கத்தில் செயற்பட வேண்டும் எனும் உயர்ந்த கொள்கையுடனும் தமிழ்ப் பண்பாட்டைப் போற்றும் வகையிலும் தமிழர் வாழும் நாடுகளில் தமிழ் கற்பிக்கும் நல்நோக்குடன் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. 1974 தைத் திங்கள் சுறவம் 08.01.1974 அன்று யாழ்ப்பாணத்தில் நடைப்பெற்ற 4ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கம் தமிழர்களை ஒன்றிணைப்பதில் வெற்றிகண்ட பன்னாட்டு இயக்கம் ஆகும். தற்போது இவ்வியக்கம் கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

உலக நாடுகளில் பல கிளைகளை அமைத்து இதுவரை 1977இல் சென்னை, தமிழ்நாடு, இந்தியா,1980இல் மொரீசியஸ், 1985இல் சேலம், தமிழ்நாடு, இந்தியா, 1987இல் கோலாலம்பூர், மலேசியா, 1992இல் சிட்னி, ஆஸ்திரேலியா, 1996இல் டொரண்டோ, கனடா, 1999இல் வெள்ளிவிழா சென்னை, இந்தியா, 2001இல் டர்பன், தென் ஆபிரிக்கா, 2004இல் புதுவை, இந்தியா, 2007இல் கோலாலம்பூர், மலேசியா, 2011இல் பிரான்ஸ், 2014இல், ஜெர்மனி, 2016இல் சனவரியில் புதுச்சேரி, இந்தியா சிறப்பு மாநாடு, 2016இல் செப்டம்பரில், பாரிசு, பிரான்சு சிறப்பு மாநாடு, 2017 இல்ஆகஸ்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 2020 பிப்ரவரி 6 - 7 மற்றும் 2022 அக்டோபர் 6-7 நாட்களில் புதுவைப் பல்கலைக் கழகத்தில் பன்னாட்டு மாநாடுகளை நடத்தியுள்ளது.

**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தோற்றம்:**

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு1974 ஆம் ஆண்டு இலங்கை யாழ்ப்பாண நகரில் வீரசிங்கம் அரங்கத்தில் சிறப்பாக நடைப்பெற்றது. அம்மாநாட்டு இறுதி நாளில் -உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. தமிழ் ஆர்வம் மிக்கப் பெருந்தகைகளால் இலாப நோக்கற்ற, அரசியல் சாராத, மக்கள், தொண்டு நிறுவனமாக, தமிழ்ப் பண்பாடு போற்றும் அமைப்பாக, 1974 ஜனவரி 8 ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது.

இவ்வியக்கம் உருவாக இலங்கையைச் சேர்ந்த குரும்பசிட்டி, இரா. கனகரத்தினம் முதன்மையானவராவார், அவருடன் பேராசிரியர் வித்தியானந்தன், தில்லிப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் சாலை இளந்திரையன், பேராசிரியர் சாலினி. இளந்திரையன், தென் ஆப்பிரிக்காவைச் சார்ந்த சோதிநாதன், திருமதி காமாட்சி சோதிநாதன், மலேசியாவைச் சோர்த் ந.ர.வீரப்பன், மேலும் இலங்கையைச் சேர்ந்த தனிநாயக அடிகளார் மற்றும் உலகப் பேராளர்களை இணைத்து இவ்வியக்கம் உருவானது. இவ்வியக்கம் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களிடையே, குறிப்பாக, நமது இளைய தலைமுறையினருக்கு தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ் கல்வி போன்றவற்றை பரப்புதல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகிய நோக்கங்களை அடிப்டையாகக் கொண்டது. இது கடந்த 49 ஆண்டுகளாக உலகளவில் செயல்பட்டு வருகிறது மற்றும் 42 நாடுகளில் கிளைகளையும் மற்ற நாடுகளில் உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. தற்போது 13 நாடுகளில் திறம்பட செயல்பட்டு வருகின்றது. இதன் முதல் தலைவராக சாலை. இளந்திரையன் பொறுப்பேற்று இரண்டாண்டு இருந்து விலகிக்கொண்டார். தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் அமைந்த செயற்குழுவில் இதன் இடைக்காலத் தலைவராக மலேசியக் கிளையின் இர.ந. வீரப்பனார் நியமிக்கப்பட்டார். அவரின் தொடர் முயற்சியின் காரணமாக 1976 இல் திரு. கனகரத்தினத்தை இயக்கப் பொதுச் செயலாளர் ஆக்கிய இரண்டே வருடத்தில் பத்து நாடுகளில் கிளைகளை அமைத்து வேருன்றச் செய்தார்.

**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாடுகள்:**

1977 இல் முதலாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு சென்னை - தமிழ்நாடு இந்தியாவில் நடத்தப்பெற்றது. அந்நிகழ்வில் பங்கேற்றப் பேராளர்களுக்கு தமிழக முதல்வர் திரு

எம்.ஜி. இராமச்சந்திரன் சிறப்பு விருந்து அளித்து மகிழ்வித்தார்.

1980 இல் மொரிசியசு அரசு சார்பாக இரண்டாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு நடைபெற்றது, அதில் மொரிசியசு பிரதமர் திரு. ராம் யூலா சிவா சங்கர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

1985 இல் மூன்றாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு இந்தியாவின் சேலத்தில் 1985 டிசம்பர் 13 முதல் 15 வரை நடைபெற்றது, அங்கு மாநில அமைச்சர் பங்கேற்றார். இந்த மாநாட்டில் 15 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

1987 இல் நான்காவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29 முதல் 31 ஆம் தேதி வரை மலேசியாவில் நடைபெற்றது, அங்கு பண்பாட்டு அமைச்சர் டத்தோ சாமிவேலு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

1992இல் ஐந்தாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு ஆஸ்திரேலியாவில் அக்டோபர் 3 மற்றும் 4 ஆம் தேதிகளில் பிரதமர் பி.ஜே.கெட்டிங் அவர்களின் ஆசீர்வாதத்துடன் நடைபெற்றது.

1996 ஆறாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு கனடாவில் ஆகஸ்ட் 24 முதல் 26 வரை ஒண்டாரியோ முதன்மையர் எம். ஹாரிஸ் முன்னிலையில் நடைபெற்றது.

1999 ஏழாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு மற்றும் வெள்ளி விழா ஆண்டு ஆகஸ்ட் 27 முதல் 29 வரை தமிழ்நாடு, சென்னை, இந்தியாவில், இந்திய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் ஆசியுடன் நடைப்பெற்றது.

2000 இல் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் கனடாவில் இலாப நோக்கற்ற கனடா கார்ப்பரேஷன் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

2001இல் கனடா நாட்டைச் சேர்ந்த சி. செல்லையா அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றார். எட்டாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு தென்னாப்பிரிக்காவில் 2001 டிசம்பர் 13 முதல் 15 வரை "நாம் இன்றும் என்றும் தமிழால் கூடி உயர்வோம்" என்றக் கருப்பொருளில் நடைபெற்றது. அதில் துணை அமைச்சர் திரு. ராயல் ராதாகிருஷ்ணன் படையாட்சி பங்கேற்றுச் சிறப்பித்தார்.

2004 இல் இயக்கத்தின் துணைத் தலைவராக இருந்த மலேசியா ப.கு. சண்முகம் இயக்கத்தின் இடைக்கால அகிலத் தலைவராக 01.01.2004 ஆம் ஆண்டில் பொறுப்பேற்று ஒன்பதாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டினைப் புதுச்சேரியில் "தமிழும் தமிழியமும்" என்னும் கருப்பொருளில் ஆகஸ்ட் 14 முதல் 16 வரை நடைபெற்றது. இம்மாநாட்டில் முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமியின் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

2007 இல் பத்தாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு மலேசியாவில் ஜூலை 20 முதல் 22 வரை கோலாலம்பூரில் உள்ள மலாய் பல்கலைக்கழகத்தில் அகிலத் தலைவரான ப.கு. சண்முகம் அவர்கள் "முயற்சியால் புலம்பெயர்ந்த தமிழர்களின் வாழ்வியலில் அன்றும் – இன்றும்" என்ற முதன்மைக் கருப்பொருளில் மாநாடு நடைப்பெற்றது. துணை அமைச்சர் டத்தோ ஸ்ரீ உதுமா ரைசாதிமின் ஆசியுடன் நடத்தினார்.

2011 இல் பதினொன்றாவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு பிரான்சு தலைநகர் பாரிசில் செப்டம்பர் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் முனைவர் வே. கோவிந்தசாமி, வேல் வேலுப்பிள்ளை ஆகியோரின் முயற்சியால் நடைபெற்றது. அதில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய பிரான்சு கிளைத் தலைவர் சரவணையூர் விசு செல்வராசா மாநாட்டுத் தலைவராகவும், ஆ. இரவீந்திரநாதன் மாநாட்டுச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தனர்.

2012 இல் "கற்பித்தலில் எதிர்நோக்கும் சிக்கல்களும், தீர்வுகளும்" என்ற கருப்பொருளில் பனிரெண்டாவது பன்னாட்டுத் தமிழ்க் கல்வி மாநாடு ஆகஸ்ட் 24 முதல் 26 வரை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் வி.சு. துரைராஜா முயற்சியினால் சென்னை எத்திராஜ் கல்லூரியில் முதுநிலை வழக்கறிஞர் இரா. காந்தி மாநாட்டுக் குழுத் தலைவராகவும், எம்.ஜி.ஆர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் மேஜர் து. இராஜா மாநாட்டுப் பொருளாளராகவும் பொறுப்பிலிருந்து அம்மாநாட்டினை நடத்தினர்.

2014 இல் 12 ஆவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு மற்றும் 40 ஆவது ஆண்டு விழா ஜெர்மனியில் அக்டோபர் 4 மற்றும் 5ஆம் நாட்களில் நடைபெற்றது. மாவை. சோ. சேனாதிராஜா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். தொடர்ந்து 2016 ஜனவரி 16 மற்றும்

17-புதுச்சேரியில் சிறப்பு பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு மற்றும் இயக்கத்தின் பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட்டது.

மாண்புமிகு புதுச்சேரி முதல்வர் திரு. ந. ரங்கசாமி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இரா. இராதாகிருஷ்ணன், அமைச்சர்கள் பங்கேற்றனர்.

2016ல் எமது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தில் மறுமலர்ச்சியை அளிக்கும் வகையில் இந்திய மண்ணின் புதுவை மாநிலத்தில உள்ள பாண்டிச்சேரி தலைநகரில் இடம்பெற்ற இரண்டு நாள் மாநாடு அனைத்துலக இயக்கத்தின் உறுப்பினர்களின் உற்சாகம் தரும செயற்பாடாக அமைத்தது. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 13ஆவது பன்னாட்டு மாநாடு இவ்வியக்கம் தோன்றிய யாழ்ப்பாண மண்ணில் நடத்தப்பட வேண்டும் எனப் புதுச்சேரியில் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

2016 செப்டம்பர் 15-16 நாட்களில் பிரான்சு, பாரிசு நகரில் இயக்கத்தின் சிறப்பு மாநாடு நடைபெற்றது. இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மாவை. சோ.சேனாதிராஜா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

**13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பன்னாட்டு மாநாடு, யாழ்ப்பாணம்**

2017 ஆகஸ்ட் 5 மற்றும் 6 நாள்களில் - 13 ஆவது பன்னாட்டுத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு இலங்கையின் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. புதுவைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பாஞ். இராமலிங்கம், மாநாட்டுக் குழுத்தலைவராக இருந்தார். புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் 200 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் இந்தியா, கனடா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஜப்பான், இலங்கை, குவைத் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாநாட்டின் 10 சிறப்பு அமர்வுகளில் 60 ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன, மேலும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 25 பேராளர்களுக்கு உலகத் தமிழ் மாமணி விருது அளித்து சிறப்பிக்கப் பெற்றனர்.

**14ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு**

சுவிசர்லாந்து நாட்டின் பாசில் நகரில் நடைப்பெற்றச் சிறப்புச் செயற்குழுவில் இலண்டன் வழக்கறிஞர் அமுது. இளஞ்செழியன் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். கனடாவைச் சேர்ந்த ம. இரவிச்சந்திரன் செயலராகத் தேர்வு செய்யப்பட்டார். செயற்குழுத் தீர்மானிக்கப்பட்டபடி 14ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பன்னாட்டு மாநாடு புதுவைப் பல்கலைக்கழகத்தில் நடத்திட ஏற்பாடுச் செய்யப்பட்டது.

**மாநாட்டுக் குழு**

புதுவைப் பல்கலைக்கழகச் சுப்ரமணியப் பாரதி தமிழியற்புலம் மற்றும் மானிடவியல் துறையோடு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இணைந்து நிகழ்த்தும் 14 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு திருவள்ளுவர் ஆண்டு. 2051 சுறவம் (தை) 23,24 (பிப்ரவரி 6-7, 2020 )ஆகிய இரு தினங்களில் புதுவைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டுக் குழு தலைமைக் காப்பாளராக பேராசிரியர் குர்மீத் சிங், புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களும், காப்பாளர்களாக வழக்கறிஞர் அடைக்கலமுத்து இளஞ்செழியன், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தலைமையகத் தலைவர், திரு. ந. நல்லுசாமி, தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இந்தியா ஆகியோரும், தலைவராக , முனைவர் க. இளமதி ஜானகிராமன், புல முதல்வர், சுப்ரமணிய பாரதி தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம் அவர்களும், துணைத் தலைவர்களாக, பேராசிரியர் முனைவர் ஆ. திருநாகலிங்கம், சுப்ரமணிய பாரதி தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், முனைவர் ஆ. செல்லபெருமாள், பேராசிரியர் & தலைவர், மானிடவியல் துறை, புதுவைப் பல்கலைக்கழகம் ஆகியோரும், ஒருங்கிணைப்பாளராக பேராசிரியராக பாஞ். இராமலிங்கம், மனிதவள மேம்பாட்டு மையம், புதுவைப் பல்கலைக்கழகம் அவர்களும் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளராக முனைவர் அரங்க மு. முருகையன், உதவிப்பேராசிரியர், புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி திரு. மாவை. சோ. தங்கராசா, ஜெர்மனி அவர்களும் பொறுப்பேற்றிருந்தனர்.

**மாநாட்டுத் தொடக்க விழா:**

6.2.20 அன்று காலை 9.30 மணிக்கு புதுவைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் அவர்கள் குத்து விளக்கேற்றி மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். உலகத் தமிழ்ப்

பண்பாட்டு இயக்கத்தினுடைய சிறப்பு தலைவர் முனைவர் பாஞ். இராமலிங்கம் மாநாட்டின் முக்கியத்துவத்தினை நோக்கவுரையாக அளித்தார். மாநாட்டுத் தொடக்க விழாவில் நீதியரசர் தாவிதன்னுசாமி தலைமை தாங்கினார் மேலும் தொடக்க விழாவில் பங்கேற்றப் பெருந்தகையாளர் களைத் தமிழியற் புலமுதல்வர் பேராசிரியர் முனைவர் க. இளமதி சானகிராமன், வரவேற்றார்.

**மாநாட்டுச் சிறப்பரங்குகள்:**

6.2.2020 காலை 10.30 மணிக்கு நடைபெறவிருக்கும் முதல் மாநாட்டுச் சிறப்பரங்கத்தில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தலைமையகத் தலைவர் வழக்கறிஞர் அடைக்கலமுத்து இளஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார். திரு. ந. நல்லுசாமி அவர்கள் முன்னிலை வகிக்கிறார், சிறப்பு விருந்தினர்களாக மாண்புமிகு முதலமைச்சர் வே. நாராயணசாமி அவர்கள் மாநாட்டு மலரினை வெளியிட்டும், "உலகத் தமிழ்மாமணி" விருதுகள் வழங்கியும் மாநாட்டு ஆய்வுக் கோவை "இலக்கியங்களில் தமிழர்ப் பண்பாடு" என்னும் நூலினை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் எம்.ஓ.எச்.பா. ஷாஜகான், அவர்கள் மாநாட்டுச் சிறப்பு அரங்கங்களைத் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் வி.பி சிவக்கொழுந்து அவர்கள் புதிய நூல்களை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். திரு. ஆர்.கே.ஆர். ஆனந்தராமன் இம்மாநாட்டிற்கு வாழ்த்துரை வழங்கினார். முனைவர் இராம். சிவலிங்கம் மாநாடு குறித்துப் பாராட்டுரை நிகழ்த்தினார். பேராசிரியர் முனைவர் ஆ. திருநாகலிங்கம் நன்றி கூறினார். குரும்பசிட்டி இரா. கனகரத்தினம், பேராசிரியர் சாலை இளந்திரையன், இர. ந. வீரப்பன், சி. செல்லையா, கோவிந்தசாமி படையாட்சி, ந. கோவிந்தசாமி, ஆகியோரின் படத் திறப்பு நிகழ்வுற்றது.

**நிறைவு விழா:**

07.02.2020 மாலை 5.00 மணிக்கு 14 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டின் நிறைவு விழா நிகழவுள்ளது. நிறைவு விழாவில் பேராசிரியர் முனைவர் க. இளமதி ஜானகிராமன் வரவேற்றார். பேராசிரியர் எஸ். பாலகிருஷ்ணன் தலைமையிலும், முனைவர் பா. சித்ரா, முன்னிலையிலும், மாண்புமிகு மாவை. சோ. சேனாதிராஜா சிறப்புரை ஆற்றினார். திரு. பி.எம். எல். கல்யாணசுந்தரம் வாழ்த்துரை வழங்கினார். திரு. மா. இரவிச்சந்திரன், பாராட்டுரை வழங்கினார். முனைவர் பாஞ். இராமலிங்கம் மாநாட்டு அறிக்கையினை வழங்கினார், வழக்கறிஞர் அடைக்கலமுத்து இளஞ்செழியன் மாநாட்டுத் தீர்மான நிறைவுரை ஆற்றினார். பேராசிரியர் ஆ. செல்லப்பெருமாள் நன்றி கூறினார்.

**வளர்ச்சியை நோக்கி:**

இயக்கத்தில் நிலவி வந்த தேக்க நிலை நீக்கப்பெற்று 2017 ஆம் ஆண்டின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தோடு நடத்தப்பட்ட மாநாடு பல நாடுகளிலும் கல்வியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் ஆண்டுகளில் மாநாடுகள் கல்வி நிறுவனங்களில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டனர். தற்போது எட்டு நாடுகளிலும் சிறப்பாகச் செயலாற்றும் இவ்வியக்கம் உலகின் பல பகுதிகளிலும் தமிழர் வாழும் இடங்களில் அமைப்புகளை நிறுவி ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

**இணையவழிப் பணிகள்:**

2021 மற்றும் 2022 முற்பகுதியில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் செயல்பாடுகள் இணையவழியாக "தமிழ் அமுதம்" என்ற பொருளில் ஒவ்வொரு மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்றன. அதனடிப்படையில் செயலர் பொன். சிறிசீவகன் "பாலர் தமிழ் அமுதம்" என்ற தமிழ் கற்கும் அடிப்படை நூலை உருவாக்கியுள்ளார்.

**15ஆவது பன்னாட்டு மாநாடு:**

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம் சார்பில் 15 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கப் பன்னாட்டு மாநாடு 2023 அக்டோபர் மாதம் 6-7 ஆம் நாள் இரு தினங்களில் தமிழ்நாடு தெள்ளார் இராசா நந்திவர்மன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது,

இந்த மாநாட்டை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சார்பில் புதுச்சேரியை சார்ந்த முனைவர் பாஞ். இராமலிங்கம் மாநாட்டுத் ஒருங்கிணைப் பாளராக நியமிக்கப் பெற்றார். இவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகச் சிறப்புத் தலைவர் ஆவார். மாநாட்டுத் தலைவராக இக் கல்லூரியின் தலைவர் டாக்டர்

வி. முத்து அவர்கள் செயலாற்றினார். இந்தியா விலிருந்துகடந்த 2012-ஆம் ஆண்டுமு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் சென்னையில் உலகத் தமிழ்க் கல்வி மாநாடு ஒன்றினை நடத்தி அந்த மாநாட்டுத் தீர்மானத்தைச் சென்னையில் உள்ள எஸ். ஆர்.எம் பல்கலைக் கழக உடன்படிக்கையின் கீழ் 200க்கும் மேற்பட்ட பேராளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். கனடா, அமெரிக்கா, ஜெர்மனி, இங்கி லாந்து, பிரான்சு, சுவிசர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, ஆஸ்திரேலியா, போன்ற நாடுகளிலிருந்து 120 பேராளர்களும் பங்கேற்றனர்.

இந்த 15ஆவது மாநாட்டில் கருப் பொருளாக, தமிழ் மொழியும் பண்பாடும் எதிர் நோக்கும் சவால்களை முன்னெடுக்கும் வகையில் பன்னாட்டு ஆய்வுக் கோவை வெளியீடாக 400 பக்ககங்களை கொண்ட வரலாற்று சிறப்புமிக்க மாநாட்டு ஆய்வுக்கோவை வெளியிடப்பட்டது.

**தொடக்க விழா**

தமிழ் வாழ்த்துடன் செல்வி. திரிக் ஷா சிவப்ரியன், இலண்டன், பரதநாட்டியம் வழங் கினார். டாக்டர். தி. ராமநாயகம் துணைத் தலைவர், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் மலேசியா வரவேற்புரையாற்றினார். பேராசிரியர் பாஞ். இராமலிங்கம், புதுவைப்பல்கலைக் கழகம், சிறப்புத் தலைவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நோக்கவுரையாற்றினார். கலைமாமணி டாக்டர். வி. முத்து சுரேஷ் அவர்கள் தலைமையுரையாற்றினார். பேராசிரியர் இளமதி சானகிராமன் மேனாள் புலத்தலைவர், சுப்ரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவை பல்கலைக்கழகம் முன்னிலையுரை யாற்றினார். வழக்கறிஞர். அடைக்கலம் இளஞ்செழியன் தலைவர் உலகத்த தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலண்டன், மாநாட்டு தொடக்கவுரை யாற்றினார். பேராசிரியர் த. மங்களேஸ்வரன் துணைவேந்தர், வவுனியா பல்கலைக்கழகம் இலங்கை அவர்கள். பேராசிரியர். ஆ. திருநாகலிங்கம் எழுதிய கட்டப்பொம்மு கதைப்பாடல் வாய்ப்பாட்டும் அடிக்கருத்தும் என்ற நூலுக்கான பரிசு ரூ 1000/- பொற்கிழி வழங்கினார்

**மாநாட்டுத் தீர்மானங்கள்**

திரு. பொன் சீறிசீவகன், செயலர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஜெர்மனி முன்மொழிதல் ஆற்றினார். திரு. முருகேசு தங்கராசா, பொருளாளர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலண்டன் தலைமையகம் வழிமொழிதல் உரையாற்றி னார்.

**மாநாட்டு நிறைவரங்கம்**

டாக்டர் எஸ். பூலோகநாதன், இலண்டன் வரவேற்புரையாற்றினார் திரு. வி. முத்து காப்பாளர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தலைமையுரையாற்றினார், வழக்கறிஞர் அடைக்கலமுத்து இளஞ்செழியன், தலைவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலண்டன் தலைமையகம் தலைமைரையாற்றினார், திரு. எம்.எஸ். தரணிவேந்தன், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னிலையுரையாற்றினார், திரு. டி.ஜி ஆனந்த் தெள்ளார் ஊராட்சி மன்ற தலைவர் முன்னிலையுரையாற்றினார், திரு. மு. சுரேசுகுமார் கல்லூரி இயக்குனர் முன்னிலையுரையாற்றினார்.

**பொன்விழா காணும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**

ஐம்பதாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஒரு தன்னார்வ சேவை அமைப்பாக தொடங்கப்பெற்றது. தொடக்க கால முன்னோடிகளின் விடாமுயற்சியினால் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநாடு நடத்தி உலகளவில் தனித்துவம் பெற்ற அமைப்பாக 42 நாடுகளில் கிளைகளை நிறுவி சிறப்பாக செயலாற்றி வருகிறது. தற்போது 200 வாழ்நாள் உறுப்பினர்களுடன் 31 நாடுகளில் தம் பணியினைத் தொடர்கிறது. 1974ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்று 2000இல் கனடாவில் பதிவு செய்யப்பட்ட இவ்வியக்கம் தற்போது 2020 முதல் லண்டனில் பதிவு மாற்றம் செய்யப்பட்டு இயக்கத்தின் லட்சனையும் (லோகோ) பன்னாட்டு வணிகச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.


குறிப்பாக கடந்த எட்டு ஆண்டுகளாக திரு. மாவை. சோ. தங்கராசா அவர்களின் இடையறா செயலூக்கத்தால் இவ்வியக்கம் சிறப்பாக செயலாற்றி வருகிறது. தற்போதைய தலைவர் வழக்கறிஞர் அமுது. செழியன், செயலர் பொன். சிறீசிவகன், ஜெர்மனி, பொருளாளர் முருகேசு தங்கராசா, இலண்டன் உள்ளிட்ட செயற்குழுவினர் பாராட்டத்தக்க வகையில் செயலாற்றி வருகின்றனர்.

2023ஆம் செப்டம்பரில் மொரிசியசு பல்கலைக்கழகத்தில் பொன்விழா ஆண்டின் தொடக்க விழாவும் பிப்ரவரியில் மலேசியாவில் பொன் விழா கொண்டாட்டங்களும் நடைபெறவுள்ளன. தொடர்ந்து இலங்கை வவுனியா பல்லைக்கழகத்தில் நிறைவுவிழா நடைபெறவுள்ளது.

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்

## International Movement for Tamil Culture (IMTC)

### இலண்டன் தலைமையகம்




தலைமைக் காப்பாளர்
நீதியரசர் **தாவிதன்னுசாமி**
புதுச்சேரி



மாநாட்டுத் தலைவர்
Dr. **ஆறுமுகம் பரசுராமன்**
முன்னாள் கல்வி அமைச்சர்



மாநாட்டுத் துணைத் தலைவர்
**அட்டார்னி T. பொன்னம்பலம்**
தலைவர், முருகன் அறக்கட்டளை, மொரிசியசு



சிறப்புத் தலைவர் & மாநாட்டுச் செயலர்
பேராசிரியர் **பாஞ். இராமலிங்கம்**
புதுச்சேரி



காப்பாளர்
**ந. நல்லுசாமி**
முன்னாள் தமிழக அமைச்சர்



காப்பாளர்
**வி. முத்து**
தலைவர், புதுவைத் தமிழ்ச் சங்கம்



ஆலோசகர்
**மாவை. சோ. தங்கராஜா**
செர்மனி



மாநாட்டுத் துணைச் செயலர்
**டாக்டர். சத்யேந்திர பீர்தம்**
மொரிசியசு



சட்டஆலோசகர்
பேராசிரியர் ச. ராமமூர்த்தி
பெங்களூரு



தலைவர்
வழக்கறிஞர் **அடைக்கலம் இளஞ்செழியன்,** இலண்டன்



துணைத் தலைவர்
டாக்டர் **பகீரதன் அமிர்தலிங்கம்,** இலண்டன்



துணைத் தலைவர்
முனைவர் **தி. இராமநாயகம்**
மலேசியா



துணைத் தலைவர்
டாக்டர் ச. **பூலோகநாதன்**
இலண்டன்



செயலாளர்
**பொ. சிறீ சீவகன்**
ஜெர்மனி



இணைச் செயலாளர்
**த. கணேசன்**
மலேசியா



இணைச் செயலாளர்
முனைவர் **முருகேசு தயாநிதி**
இலங்கை



இணைச் செயலாளர்
டாக்டர் **இராசன் கைலைநாதன்**
ஆஸ்திரேலியா



பொருளாளர்
**முருகேசு. தங்கராஜா**
இலண்டன்



**ஜே.எஸ். மைக்கல் கொலின்**
பிரான்சு



புலவர். **கதிர் முத்தையன்**
இந்தியா




முனைவர். **அரங்க. மு. முருகையன்**
இந்தியா



முனைவர். **அ. அருளாநந்தம்**
இலங்கை



**சுபாஸ் சுந்தரராஜன்**
கனடா



**ந. சரவணப்பெருமாள்**
சுவிட்சர்லாந்து



**முல்லை மோகன்**
ஜெர்மனி

# 16ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பன்னாட்டு மாநாடு 2023

## இந்தியப் பேராளர்கள்



பேராசிரியர் குர்மித் சிங்
புதுச்சேரி


பேராசிரியர் குர்மித் கவுர்
டெல்லி



திரு. ந. நல்லுசாமி
திருச்சி


டாக்டர். ராமேஸ்வரி
திருச்சி


திரு. மு. முகமது அப்துல்லா
சென்னை


பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்
புதுச்சேரி


திருமதி. மங்கையர்க்கரசி
புதுச்சேரி


திரு. கார்த்திகேய சிவ சேனாபதி
சென்னை


திரு. ரங்கநாதன்
USA


முனைவர் கே.ஆர். கமலா முருகன்
சென்னை


பேராசிரியர் இளமதி சானகிராமன்
புதுச்சேரி


முனைவர் மு. கருணாநிதி
புதுச்சேரி


டாக்டர் செந்தில்குமார்
திருச்சி


டாக்டர் லட்சுமி பிரபா
திருச்சி


முனைவர் தர்ம. இராஜேந்திரன்
சென்னை


முனைவர் வேலம்மாள்
தென்காசி


பேராசிரியர் டி. உமாதேவி
டெல்லி


முனைவர் கே. பழனிவேலு
புதுச்சேரி


முனைவர் லட்சுமிதத்தை
புதுச்சேரி


திருமதி. இராஜகுமாரி
கன்னியாகுமாரி


முனைவர் சோ. சீனுவாசன்
புதுச்சேரி


திரு. வெங்கட சுப்ரமணியன்
சென்னை


திரு. கேசவ மூர்த்தி
சென்னை


திருமதி. சிவசிதம்பரம் அமுதா
தஞ்சாவூர்


முனைவர் கே. திலகவதி
தஞ்சாவூர்

# 16ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பன்னாட்டு மாநாடு 2023

## இந்தியப் பேராளர்கள்


முனைவர் அரங்க. முருகையன்
புதுச்சேரி


புலவர். கதிர். முத்தையன்
கடலூர்


முனைவர். சு. சுதாசிவம்
சென்னை


P. தினேஷ்குமார்
புதுசசேரி


கலைமாமணி D. குமரன்


திரு. P. சுரேஷ்


திரு. மகேஷ்


திரு. தளிர்வேந்தன்


திரு. புருஷோத்தமன் (எ) சதிஷ்



திரு. M. ராஜேஷ்


ஸ்ரீ அங்காளம்மன் கலைக் குழு, புதுச்சேரி

## இங்கிலாந்து


திரு. அமுது செழியன்



டாக்டர் பகீரதன் அமிர்தலிங்கம்


டாக்டர் ச. பூலோகநாதன்
இலண்டன்


திரு. முருகேசு தங்கராஜா

## ஜெர்மனி


திரு. மாவை. சோ. தங்கராஜா


திரு. பொன். சிறி சீவகன்


திரு. முல்லை மோகன்

## பிரான்சு


திரு. பாலகிருஷ்ணன்
பாரிசு


திரு. சைலென்ஸ்சு பிராட்ரிண்ட்
பாரிசு


ஜே.எஸ். மைக்கல் கொலின்
பாரிசு


## இலங்கை


திரு. மாவை. சோ. சேனாதிராஜா


பேராசிரியர் த. மங்களேஸ்வரன்
இலங்கை


பேராசிரியர் வ. கனகசிங்கம்


முனைவர் முருகு. தயாநிதி


டாக்டர் அருளாநந்தம்

## ஆஸ்திரேலியா


கலாநிதி அன்புநிலா
காசியானந்தன்


கலாநிதி ராஜன் கைலைநாதன்


கலாநிதி சிதம்பரக்குமார்
தேவேந்திரம் பிள்ளை


முனைவர் பச்சைவதி

## பிற நாட்டினர்



திரு ரமேஷ் தர்மராஜன்
தாய்லாந்து


முனைவர் ரவி கோவிந்தராஜ்
கத்தார்



வலைத்தளம் S. பார்த்தசாரதி
USA


டாக்டர் எம்.எஸ். இலட்சுமி
சிங்கப்பூர்


திரு அதியமான் கார்த்திக்
நைஜிரியா


யோகாச்சாரியா
பேராசிரியர் நீலமேகம்
ரீயூனியன்


திரு. சுபாஷ் சுந்தரராஜ்
கனடா


திரு. G. சிவசண்முகம் பிள்ளை
செசல்ஸ்


திரு. சரவணப்பெருமாள்
சுவிட்சர்லாந்து

## மலேசிய பேராளர்கள்


டாக்டர் தி. இராமநாயகம்



டத்தோ டாக்டர் இல. கிருஷ்ணன்


திருமதி. சாந்தகுமாரி


திரு. கணேசன் தங்கவேலு



திரு. குணபதி ஆறுமுகம்

# மலேசிய பேராளர்கள்


திரு. கஜேந்திரன் சிதம்பரம்


திரு. அமுசு ஏகாம்பரம்


டாக்டர் சித. பழனியம்மாள்


திரு. வ. பெரியசாமி


டாக்டர் கிருபாகரன் மாரிமுத்து


டாக்டர்.எம்.எஸ். ஸ்ரீலஷ்மி


திரு. மேனகா நாராயணசாமி



திருமதி. வாசுகி சின்னப்பன்


திருமதி. உமாதேவி சிதம்பரம்


திருமதி. விஜயா வெள்ளசாமி


திருமதி. மேரி வசந்தா குமாரி


திரு. கோபாலன் பொன்னுசாமி


திரு. சண்முகம் முனியாண்டி


திருமதி. லிம் லை வான்


ஜீவிதா சண்முகம்


திருமதி. பிரியா குமாரி


திருமதி. ரீட்டா ஜோஸ்பின்



திருமதி. ரேணுகா


திருமதி. செல்வமலர் சுப்பையா


திருமதி. டோனா பாக்கியம்


திரு. சுப்ரமணியம் ராமலு



திருமதி. விஜயா கௌரி



திருமதி. யமுனா


திரு. சார்லஸ் சுரேஷ்


திரு. சார்லி


திருமதி. லோகம்மாள் நடேசன்


திரு. பிளிப்ஸ்


திரு. கணபதி சாமிநாதன்

## 16ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பன்னாட்டு மாநாடு 2023


# உலகத் தமிழ்மாமணி விருது பெறுவோர்




**பேராசிரியர் வ. கனகசிங்கம்**
துணைவேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை




**திரு. ந. நல்லுசாமி**
தமிழக முன்னாள் அமைச்சர், திருச்சி



**திரு. எம். முகமது அப்துல்லா**
நாடாளுமன்ற உறுப்பினர், சென்னை



**திரு. ஆச்சாரியா நீலமேகம்**
ரியூனியன்



**திரு. கார்த்திகேய சிவ சேனாபதி**
சென்னை



**திரு. சத்தியேந்திரா**
மொரிசியசு



**திரு. தாமஸ் இட்டோரி புருக்சிமா**
ஜப்பான்



**திருமதி. டக்சோ குருக்கவா**
ஜப்பான்



**திரு. அருணாசலம் புருஷோத்தமன்**
மொரிசியசு



**திருமதி. ந.வீ. பொன்னி வீரப்பன்**
மலேசியா



**கலாநிதி அமுதநிலா காசியானந்தன்**
ஆஸ்திரேலியா



**முனைவர். சு. சதாசிவம்**
சென்னை கிறிஸ்டியன் கல்லூரி, சென்னை



**திரு. த. கணேசன்**
இணை செயலாளர், உதபஇ, மலேசியா



**டாக்டர். எம். எஸ். ஸ்ரீலட்சுமி**
சிங்கப்பூர்



**முனைவர், ரவி கோவிந்தராசன்**
கத்தார்



**திரு. சைலென்ஸ்சு பிராட்ரிண்ட்**
பிரான்சு



**Dr. கேசவன் சொர்ணம்**
மொரிசியசு



**Dr. பொனுசாமி திருமால் செட்டி**
மொரிசியசு




**முனைவர். உமா அழகிரி**
மொரிசியசு



**திரு. அதியமான் கார்த்திக்**
நைஜிரியா



**திரு. த. ரமேஷ்**
பாங்காக் தாய்லாந்து




**திருமதி. தாமரை சீனுவாச ராவ்**
கம்போடியா




**திரு. மு. இளங்கோவன்**
புதுச்சேரி



**டாக்டர். சிதம்பரக்குமார் தேவேந்திரம்பிள்ளை**
ஆஸ்திரேலியா

# 16ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க பன்னாட்டு மாநாடு 2023

## திருவள்ளுவர் ரத்னா விருது பெறுவோர்



பேராசிரியர். இராஜேந்திர சிங்
இந்தியா



டாக்டர். ரீனா சிங்
போபால்



டாக்டர் மணி
மைசூர்



டாக்டர். சோகினி பானர்ஜி
கொல்கத்தா

## பண்பாட்டுச் சேவா தங்கப் பதக்கம் 2022



முனைவர். தி. இராமநாயகம்
மலேசியா


## வைரத் தமிழர் விருது பெறுவோர்



டத்தோ டாக்டர் இல. கிருஷ்ணன்
மலேசியா



திரு. சே. சத்தீஷ்குமார்
ஜப்பான்



திரு. கஜேந்திரன் சிதம்பரம்
மலேசியா



திரு. G. சிவசண்முகம் பிள்ளை
செசல்ஸ்



மேனகா நாராயணசாமி
மலேசியா



டாக்டர். S. சீனுவாசன்
புதுச்சேரி



டாக்டர். கி. திலகவதி
தஞ்சாவூர்



திருமதி வெ. விஜயா சனார்த்தனன்
மலேசியா


Pakkamudayanpet, Puducherry.











# ஆப்பு இலக்கணக் கவிதைக் "கல்"

## திருவள்ளுவர் மன்னிக்கட்டும்

**க**ற்கக் கசடற
**வி**ற்பவை கற்றபின்
**வி**ற்க அதற்குத் தக!

## மீண்டும் கண்ணகியா?

கண்ணகி
மீண்டும் உயிரோடு வந்து
நீதி கேட்டுப் போராடினால்...?

நீதியரசரைச் சாகடித்து
மதுரையை எரித்த
தீவிரவாதி ஆக்கி
கண்ணகியைக்
கண்டதும் சுட்டுக்கொல்லத்
தயாராகிவிடும்
நமது நடைமுறை!

ஆகவே
இன்றைய
நாட்டு நடைமுறை
கண்ணகிகளுக்குச்
சரிப்பட்டே வராது!

## சம்மதம்

"எம்மதமும் சம்மதம்"
_இந்தச் சம்மதத்தில்கூட
மதத்தின் ஊடுருவல்!

**கவிஞர் முகவை முத்து**

## லாரி ஓட்டுனராய்ப் பிறந்து...

எனது வளர்ப்பு நாயை
லாரி அடித்துக் கொன்றபோது,
செத்துப்போன நாயிடம்
கண்ணீரோடு சொன்னேன்

"போய்வா செல்லமே!
அடுத்த பிறப்பில்
நீ லாரி ஓட்டுனராய்ப் பிறந்துவா!

"உன்னைக் கொன்றவனோ
நாயாகப் பிறப்பான்!
நீ லாரிஓட்டி வரும்போது
அந்த நாய் குறுக்கே வரும்

"உன்னைக் கொன்றவனுக்குப்
அடுத்த பிறப்பிலாவது புத்திவர
நீ செய்யவேண்டியது
ஒன்றே ஒன்றுதான்...

அந்த நாய்க்குப் புத்திவர... ...
அந்த நாய்க்குப் புத்திவர... ...

"அந்த நாய்
சாலையைக் கடக்கும் வரை
வண்டியை நிறுத்தி
மனிதத் தன்மையைக் காட்டு!

"செத்துப்போன
என் செல்வமே
அடுத்த பிறவியில்
நீ ஓட்டுனராகப்பிற... ..."

# அரசியல்வாதி--
# அ"ற"சியல்ஜோதி. 1

**-உங்கள் முகவை**

அரசியல்வாதி என்று சொன்னாலே போதும், அவரைப் பாடாவதி படுமோசம் என்று சொல்லிவிடுவார்கள்!

அந்த வார்த்தைகளால் வண்ணம் பூசியதோடு விட்டால்கூடப் பாதகமில்லை. தமிழில் பொல்லாதவரை போக்கிரிகளை எந்த எந்தக் கீழ்த்தரமான சொற்களால் எள்ளி நகையாடுவார்களோ அத்தனை சொற்களாலும் அபிசேக ஆராதனைகளை நடத்தி விடுவார்கள். அரசியல்தான் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம் என்பார்கள்!

இந்த நாட்டில் அத்தனை துறைகளும் உத்தமர்கள் ஒழுக்க சீலர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதைப் போலவும், அரசியல் மட்டுமே, நேர்மைக் குறைவுள்ளவர் கையில் போய் விட்டதைப் போலவும், புழுதிவாரித் தூற்றுவார்கள்!

திரைப்படத்தில், படுமோசமான வில்லனைத்தான் அரசியல் வாதியாகக் காட்டுவார்கள்! ந(ட்)டுநிலை தொலைக்காட்சி அச்சு ஊடகங்களைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். இப்படி அவர்கள் அரசியல்வாதிகளை இடித்துரைப்பதோடு விட்டுவிட்டால் கூடப் பாதகமில்லை. அதோ அந்த நடிகர் அரசியலுக்கு வரப்போகிறார்! இதோ இந்த நடிகர் அரசியலுக்கு வரப்போகிறார் என்று பரப்புரையை நீண்டகாலமாகவே தொடங்கி விட்டார்கள்.

குறிப்பாகத் தமிழ்நாட்டு ஊடகங்களுக்கு அப்படிஓர் ஆர்வம்! கெட்டுப்போன அரசியலை இவர்கள் வந்துதான் திருத்தப்போகிறார்கள் என்று ஊடகங்கள் நம்பினால் கூடப் பாதகமில்லை; தமிழர்களின் தராதரத்திற்கு இவர்களேபோதும் என்று ஏளனப்படுத்துகிறார்கள் என்பதே யதார்த்தம்!

இப்படி அவை சொல்வதுகூட இருக்கட்டும். தமிழ்நாட்டு அரசியலில் நேர்மையானவரே இல்லை என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்த ஏன் இப்படி முயற்சிக்கிறார்கள்? அந்தக்காலத்தில் இருந்தவர்களைக் கூறினால், அதெல்லாம் அந்தக் காலம்! இன்றோ எல்லாம் கனவு, ஏதோ பழைய நினைவு என்பார்கள். நம்மோடு இன்றும் எத்தனையோ நேர்மைமிகு அரசியல்வாதிகள் வாழ்ந்து கொண்டிருக்கத்தான் செய்கிறார்கள்.

அரசியல்வாதி என்றாலே அரசியல் வியாதி என்று அருவருப்பாய்ச் சொல்லுவோர்க்காக, அரசியல்வாதிகளில் ஓர் அறசியல் சோதியைப்பற்றிச் சில செய்திகளை நாம் பகிர்ந்துகொள்வோம். நான் இங்கே எழுதப்போகும் இவர் இன்றோ நேற்றோ அரசியலுக்கு வந்தவரல்ல! சற்றேறக் குறைய அறுபது ஆண்டுகளுக்கு மேலாக பொது வாழ்வில் அரசியலில் இருந்து வருபவர். அந்த நாடறிந்த நல்லவரின் பெயரை இறுதியில் கூறுகிறேன். அவர்வாழ்வில் இருந்து சில நிகழ்வுகளை மட்டும் முதலில் இங்கே பதிவுசெய்ய விரும்புகிறேன்!

- தான் சார்ந்திருக்கும் அரசியல் கட்சியில் 13- ஆண்டு காலம் உயர்பதவி வகித்த போதும் கட்சி அலுவலகத்திற்கு பேருந்துப் பயணியாகவே வந்துசென்றவர். இன்று 80- வயதுக்கு மேலான நிலையிலும் பேருந்தை மட்டுமே பயன்படுத்தி வருபவர்.
- அவரோடு கட்சி அலுவலகத்தில் அவர் மகள் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். எங்க கட்சிக்காரர் திரட்டிய சந்தாத் தொகையில் இந்த அலுவலகம் இயங்கிக் கொண்டிருக் கிறது, ஆகவே இந்த மூன்றுநாள் வாடகை உணவுத்தொகை ஆகியவற்றைகொடு என மகளிடம் வசூலித்துக் கட்சியிடம் அந்தத் தொகையை ஒப்படைத்தவர்.

- இவர் வெள்ளையரை எதிர்த்துப் போராடிய விடுதலைப் போராட்டத் தியாகி. இதைக் கௌரவிக்க அரசு சிறப்பு ஓய்வூதியம் வழங்க முன்வந்தது, அதை ஏற்கமறுத்த இந்த மாமனிதர், சொன்ன விளக்கம் என்ன தெரியுமா? ”கடமையைச் செய்ததற்கு ஊதியம் பெறுவது முறையல்ல” – இந்தப் பதில்தான்!
- ஒரு சாதிக் கலவரத்தில் இவருடைய மாமனார் கொல்லப்பட்டார். அதற்கு அரசுவழங்கிய இழப்பீட்டுத் தொகையை ஏற்கமறுத்து என்னசெய்தார் தெரியுமா? அந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்விச் செலவுக்குப் பகிர்ந்து வழங்கினார்! அடக்குமுறைக்கு ஆளானவர் குழந்தைகளுக்கு மட்டுமல்ல; அடக்கிஆள நினைத்துச் சட்ட நடவடிக் கைகளால் தன்குடும்பத்தைக் காப்பாற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டவர் வீட்டுக் குழந்தைகளுக்கும் பகிர்ந்து கொடுத்த மனித நேயர்!
- இவருடைய 80-ஆம் வயதில் இவர் சார்ந் திருக்கும் அரசியல்கட்சி திரட்டிக் கொடுத்த ஒரு கோடி ரூபாய் பெரு நிதியை, அந்தக் கட்சிக்கே திருப்பிக் கொடுத்த தூயவர்!
- தமிழ்நாடு அரசு 2007-ஆம் ஆண்டில் விருது வழங்கி ஒரு இலட்ச ரூபாய் நிதி வழங்கிய போது, தான் சார்ந்துள்ள கட்சிக்குப் பாதித்தொகைக் கொடுத்தவர், மீதித்தொகையை விவசாயத் தொழி லாளர் சங்கத்திற்குக் கொடுத்து விட்டு வெறுங்கையை வீசிக்கொண்டு வீட்டிற் குச் சென்ற விந்தை மனிதர்!
- அண்மையில், தமிழ்நாடு அரசு ”தகை சால் தமிழர்” விருதை வழங்கி 10-லட்ச ரூபாய் நிதியும் வழங்கியது. அந்தப் பத்துலட்ச ரூபாயோடு தன் கையிலிருந்த 5-ஆயிரம் ரூபாயைச் சேர்த்து மொத்தத் தொகையை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கே முதல்வர் கையில் திருப்பிக் கொடுத்த சிறப்புமிக்கவர் அவர்.
- நாள்தோறும் தன் வீட்டிலிருந்து பேருந் தில் கட்சி அலுவலகம் வரும் அவருடைய இன்னல் தீர்க்க எண்ணிய தமிழ்ச் சான்றோர் பேரவை நிறுவனத் தலைவர் அய்யா அருணாச்சலம் அவர்கள், ஒருகாரை வங்கிக் கொடுக்க விரும்பிய செய்தி தொலைபேசிமூலம் தெரிவிக்கப் பட்ட போது, அதை ஏற்க மறுத்துக் கோபப்பட்டுப் பேசியதோடு, தொலை பேசி இணைப்பையும் துண்டித்தவர்.. இருந்தாலும் பின்வாங்காத அய்யா அருணாச்சலம் அவர்கள் புதிய கார் ஒன்றை வாங்கி. அந்தக்காருக்கு 6080- என்ற பதிவு எண்ணையும் பெற்றார். 60 என்பது அவருடை பொதுவாழ்வைச் சுட்டிக்காட்ட. 80- என்பது அவர் வயதைச் சொல்ல. பிறந்தநாள்விழா மேடையில் அப்போதைய தமிழக முதல்வர் கலைஞரே மேடையில் இதை அறிவித்தார். இருந்தாலும் காரின் சாவி அவருடைய கட்சிச் செயலாளரிடமே வழங்கப் பட்டது. காரும் கட்சிக்கே உடைமை ஆக்கப்பட்டது. இன்றும் இந்த அதிசய மனிதர் பேருந்துப் பயணியேதான்!

திரைப்படத்தில் கதாநாயகரைக்கூட இவ்வளவு உத்தமராகக் காட்டமாட்டார்கள். ஆனால் இந்த உத்தம அரசியல் தலைவரோ இன்றும் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அறசியல்வாதித்! தமிழர்தான்!

இந்தத் தகைசால் தமிழர் யார் தெரியுமா

13- ஆண்டுகள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர், 25- ஆண்டுகள் விவசாய சங்கத்தலைவர் என்று சாதித்துக் காட்டிய அய்யா நல்லகண்னு அவர்கள்தான்!

இப்படிப்பட்டவரைப் பற்றியெல்லாம் நம் ஊடகங்கள் வெளிகொண்டு வருவதில் லையே ஏன்? இவர்களைப் பின்பற்றி யாரும்வாழ்ந்து விடக்கூடாது என்ற நல்ல எண்ணந்தான்!

அரசியலில் அங்கே தவறு நடக்கிறது

இங்கே தவறு நடக்கிறது என்று தேடித் தேடிச் செய்தி வெளியிடுபவர்கள் இப்படிப்பட்ட நேர்மைகளைக் கண்டுகொள்வதே இல்லை!

அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகால அரசியல்வாதியைப் பற்றிய செய்தியே பலருக்குத் தெரியாதென்றால்; நேற்றோ இன்றோ அரசியலுக்கு வந்த நேர்மையான வரைப் பற்றி யாருக்குத் தெரியப்போகிறது?

லட்சக் கணக்கான அரசியல்வாதிகள் உள்ள நாட்டில், ஒரே ஒரு நல்லவரைப் பற்றிக் கூறிவிட்டால் போதுமா? என்று வியாக்கி யானம் பேசுவார்கள் வாதத்திற்காக அதையும் ஒப்புக்கொள்வோம்.

ஒரே ஒரு திருவள்ளுவர், ஒரேஒரு புத்தர், ஒரேஒரு காந்தி என்று ஓரங்கட்டி விட்டோமா?

இன்னுங்கூடச் சொல்ல வேண்டுமா னால், மனிதனுக்கு ஒரே ஒரு இதயந்தானே என்று ஒதுக்கியாவிட்டோம்?

ஏன் இவர்களுடைய சிந்தனைகளை-செயல்பாடுகளைப் பற்றித் திரும்பத்திரும்ப உணர்த்திக் கொண்டிருக்கிறோம்? ஐயா நல்லகண்ணு அவர்களைப்போல் இன்னும் ஒருவராவது சாதித்துக் காட்டமாட்டார்களா என்ற எதிர்பார்ப்புத்தானே

இன்று நமதுஅச்சு ஊடகங்களில் ஆசிரியரும் அச்சிடுபவரும் வெளியிடுபவரும் தவிர்த்து அத்தனையும் திரைப்படம் மட்டுமே என்று சொன்னாலும் தவறே இல்லை! தொலைக்காட்சிகளில் அதன் பெயரைத் தவிர்த்து அத்தனையும் திரைப்படந்தான்!

நல்லவர் என்றுசொல்லவேண்டுமானால் தங்கள் ஜாதிக்காரராக இருக்கவேண்டும் என்ற எழுதப்படாத இலக்கணத்தில் இயங்கு பவைதான், நமது ஊடகங்கள்.

அரசியல் வாதிகளைமட்டும் குற்றம் சொல்லி ஆனந்தப்பட அப்படி அவர்கள் என்னதான் செய்தார்கள்?

அனைவருக்கும் வாக்குரிமை

அனைவருக்கும் கல்வி

அனைவரும் சட்டத்தின்முன் சமம்

போன்ற அவர்களுக்குப் பிடிக்காத சட்டங் களைக் கொண்டுவந்தது அரசியல் வாதிகள் தானே! அதனால்தான் அவர்களைக் கேவலப் படுத்தப் பார்க்கின்றனர்.

அரசியலில் நல்லவர் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டுமானால் ஐயா நல்லகண்ணு போன்றவர்களுக்கு இந்த நாட்டின் உயரிய விருது வழங்கப் படவேண்டும்.

கல்விநிலையப் பாடப்புத்தகங்களில் இவரைப்பற்றி எழுதிப் போதிக்கப் படவேண்டும்

நாட்டின் தலைநகரங்களில் குடியரசு விடுதலைநாள் மாநில அரசு விழாக்களில் தேசியக் கொடியேற்றும் சிறப்புமிக்கவராகக் கௌரவிக்கப்படவேண்டும்.

ஐயா நல்லகண்ணுவைப் போன்றவர்கள் தேர்தலிலே நின்றால் அவர்களை எதிர்த்து யாரும் போட்டியிடக்கூடாதென்ற சட்டம் மக்கள் மனதிலே எழுதப்படவேண்டும்!

இந்த ஆசைகளை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்போவது யார்? நம்மைப் போன்ற சிற்றிலக்கியப் பத்திரிகைகளின் குரல், விடியலை அறிவிக்கும் வைகறைச் சேவலின் குரலாக ஒலிக்கட்டும்.

அந்த நாளுக்காகக் காத்திருப்போம்!

அதே நேரத்தில் ஐயா நல்லகண்ணு அவர்களுக்கு தகைசால் தமிழர் விருது வழங்கிய தமிழக முதல்வருக்கு நன்றி கூறுவோம்.

அதேபோல ம.தி.மு.க சங்கொலி ஏட்டில் அவரைப்பற்றி விரிவாக எழுதவைத்த ஆருயிர் அண்ணன் வைகோ அவர்களுக்கும் எழுதிய ஆ. வந்தியத்தேவன் அவர்களுக்கும் நம் மனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்வோம்.

அண்ணன் வைகோ அவர்களின் சங்கொலி ஏட்டுக் கட்டுரையை நான் படித்திரா விட்டால், அரசியல் ஜோதி ஒருவரை நானும் அறிந்திருக்கமாட்டேன்; அய்யா நல்லகண்ணு அவர்களைப் பற்றி இங்கே எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்காது அல்லவா!

# துணுக்குச் சுவடி

## எந்த நாட்டிற்கும், எந்தக் காலத்திற்கும் பொருந்தும்படி அந்தக் காலத்தில் ஆப்பிரகாம் லிங்கன் சொன்ன கதை

அரசர் ஒருவர் வேட்டையாடப் புறப்பட்டார். புறப்படும்முன், "இன்று மழைவருமா?" என்று தனது மந்திரியிடம் கேட்டார். "இன்று மழையேவராது. அதற்கான அறிகுறியே இல்லை" என்று அமைச்சர் தந்த உறுதிமொழியை நம்பிக் காட்டுக்கு வேட்டையாடப் புறப்பட்டார்.

ராஜா காட்டை நோக்கி வேட்டையாடப் போய்க்கொண்டிருக்கும் போது, கிராமத்து ஆள்ஒருவரை வழியில் சந்தித்தார். அந்த ஆள் "மன்னவா! மழைவரப்போகிற மாதிரி அறிகுறிகள் தென்படுகின்றன, இப்போது வேட்டைக்குப் போகிறீர்களே" என்று எச்சரித்தார். மந்திரிக்குத் தெரியாததா இந்தக் கிராமத்தானுக்குத் தெரியப்போகிறது?- என்று அலட்சியமாகப் பதிலே சொல்லாமல் பயணத்தைத் தொடர்ந்தார், அரசர்.

ஆனால் பெரும்மழையில் நனைந்து வேட்டையாட முடியாமல் திரும்பி வந்தார். வரும் வழியில் மீண்டும் அதே கிராமத்து நபரைச் சந்தித்தார்.. "ஆமாம், மழை வரப்போகிறதென்று நீ மட்டும் எப்படி முன்கூட்டியே தெரிந்துகொண்டாய்?" என்று அளவுக்குமீறிய ஆச்சரியத்தோடு கேட்டார்.

"அதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது மகாராஜா. ஆனால் என் கழுதைக்கு மட்டும் தெரிந்துவிடும். எப்போதெல்லாம் மழை வரப்போகிறதோ, அப்போதெல்லாம் அது, தன்காதுகளை முன்பக்கமாக நீட்டிக்கொள்ளும்" என்றார். அந்தக் கிரமத்து நபர். அரண்மனை திரும்பிய மன்னர் முதல் வேலையாக மந்திரியைப் பதவியிலிருந்து நீக்கினார். உடனடியாகக் கிராமத்து நபருடைய கழுதையை மந்திரியாக்கினார். அன்றிலிருந்து நாட்டிலுள்ள கழுதைகளெல்லாம் பதவியைத்தேடி அலைகின்றன.!

## பெர்னாட்ஷாவும் சர்ச்சிலும்

இங்கிலாந்தில் சர்ச்சில் பிரதமராய் இருந்த காலத்தில் நிகழ்ந்த செய்தி இது. நாடாளுமன்றத்தில் பிரதமர் கொண்டுவந்த சட்டமுன்வடிவிற்குக் கடுமையான எதிர்ப்பு எழுந்தது.

அதை ஜார்ஜ் பெர்னாட்ஷாவும் எதிர்த்தார். எதிரி பதில்சொல்ல முடியாத அளவிற்குக் கிண்டல் செய்வதில் கில்லாடி பெர்னாட்ஷா. கேலியும் கிண்டலும் கலந்த வடிவில் சர்ச்சிலுக்கு ஒரு கடிதத்தை எழுதி, தனது நாடகத்திற்கான இரண்டு டிக்கட்டையும் அனுப்பினார்.

அந்தக் கடிதத்தில், "அன்பான சர்ச்சில் நான் அரங்கேற்றவுள்ள புதிய நாடகத்திற்கான இரண்டு டிக்கெட்டுகளை அனுப்பியுள்ளேன்.. ஒன்று உங்களுக்கு, இன்னொன்று உங்கள் ஆதரவாளர் ஒருவருக்கு, அதாவது நாட்டில் ஆதரவாளர் என்று யாராவது ஒருவர் உங்களுக்கு இருந்தால் பயன்படுத்திக் கொள்ளுங்கள்." என்று குறிப்பிட்டிருந்தர்.

அதற்கு சர்ச்சிலும் செமத்தியான பதில் ஒன்றை அனுப்பினார். "அன்பான பெர்னாட்ஷா அவர்களே நன்றி! தங்கள் நாடகத்தின் முதல்காட்சிகு வர இயலாமைக்கு வருந்துகிறேன். இரண்டாம் நாள் நாடகத்திற்குக் கட்டாயம் வருகிறேன், உங்கள் நாடகம்கூட இரண்டு நாளைக்கு நடைபெறுமனால்!"

## ஹோமரிடம் பொடிவைத்த பொடியன்

இது கிரேக்கநாட்டுக் ஹோமர் வாழ்வில் நடந்தது..

சிறுவன் ஒருவன் ஹோமரிடம் 'நான் போடும் விடுகதைக்குப் பதில்சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

சிறுவன்தானே அசட்டையாக ஒப்புக்கொண்டார்..

"நீ பிடித்தால் கொன்றுவிடுவாய்; பிடிக்காவிட்டால் உன்னோடு கொண்டு போய்விடுவாய்! அது என்ன என்றான்".

ஹோமரால் பதில் சொல்லமுடியவில்ல. சிறுவனோ தலையிலுள்ள பேன் என்று விடைசொன்னானாம்! அவமானப்பட்ட ஹோமர் தற்கொலை செய்துகொண்டதாகக்கூடச் சொல்வார்கள்.

# புதுச்சேரி அரசின் கட்டாயத் தமிழ் எங்கே?

## புதுச்சேரித் தன்னுரிமைக் கழகம் ஊடக அறிக்கை:

புதுச்சேரி அரசு நடமுறைப்படுத்தியுள்ள சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் தமிழ்ப் பாடம் கட்டாயம் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி பொதுநல இயக்கங்கள், அரசியல் கட்சிகள் நேரிலும், ஊடகங்களின் வாயிலாகவும் கோரிக்கைகள் வைத்து அரசை வலியுறுத்தியிருந்தன. நிறைவேற்றுவதாக புதுச்சேரித் துணைநிலை ஆளுநர், முதலமைச்சர், கல்வித்துறை அமைச்சர் ஆகிய அனைவரும் உறுதியளித்திருந்தார்கள்.

இதில் தலைமை நிருவாகியாக உள்ள துணைநிலை ஆளுநர் அவர்கள், தமிழ் கட்டாயமாக இருக்கும், புதுவையில் கல்விப் புரட்சியே ஏற்படும் என அழுத்தமாகக் கூறியிருந்தார்கள். இப்போது "தமிழ் நிச்சயம் இருக்கும்" என்கிறார். நிச்சயம் தமிழ் இருக்கும். ஆனால் பாடத்தில் கட்டாயம் இருக்குமா என கேட்கிறோம்.

மாணவர் சேர்க்கைத் தொடங்கப் பட்டுவிட்டது. எந்த மாணவரும் தமிழைக் கட்டாயப் பாடமாக எடுக்கவில்லை. விருப்ப மொழிப் பாடங்களில் உள்ள பிரெஞ்சு போன்ற பிற மொழிகளைப் படித்தால் நூற்றுக்கு நூறு (100%) மதிப்பெண் கிடைக்கும் என்கிற நிலையில்தான் மாணவர்கள் அனைவரும் பிற மொழிகளை எடுக்கிறார்கள். மாணவர்களின் தமிழ்ப் புறக்கணிப்புக்கு இதுவே முதல் காரணமாகும். தமிழைக் கட்டாயப் பாடமாக எடுத்தால் தமிழுக்கு மதிப்பெண் நூறு அளிக்கப்படும் என்று கல்வித்துறை அறிவித்திட வேண்டும்.

மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையில் தாய்மொழிக் கல்வி இருக்கிறது எனக் கூறி வருகிற மத்திய அரசு புதுச்சேரி யூனியனில் தாய் மொழித் தமிழைப் புறக்கணிக்கலாமா?

காசியில் தமிழ்ச் சங்கமம், சவுராட்டிராவில் தமிழ்ச் சங்கமம், அமெரிக்காவில் தமிழ் இருக்கை என்றெல்லாம் கூறி மகிழ்கிற ஆளுநர் அவர்களே! இங்கே தமிழ்ப் புதுச்சேரியில் தமிழ் இருக்கையைக் காலியாக்கி விட்டார் களே. புதுச்சேரியில் தமிழுக்கு இருக்கையும் இல்லை; அதில் அமர தமிழும் இல்லை.

தமிழ்தான் தொன்மையானது; தமிழ் இலக்கியங்கள்தான் தொன்மையானது; இலக்கிய வளமுடையது என்பதெல்லாம் வெறும் வெற்றுரையாகவே இருக்கிறது.

புதுச்சேரியைப் பிரெஞ்சியர் ஆண்டிருந்தபோதுகூட தமிழ் பயிற்று மொழியாக இருந்தது. தொடக்கப் பாடப் பிரிவு ( cours élémentaire ) எனவும், உயர் தொடக்கப் பிரிவு ( cours supérieur ) எனவும், சிறப்புத் தமிழ்ப் பாடப் பிரிவு ( cours de haute tamoul) எனவும் இருந்தது. ஆனால் சுதந்தர இந்தியாவில் இணைந்த விடுதலைப் புதுச்சேரியில், தமிழர் ஆட்சியில் கல்வித் துறையில், அரசு அலுவலகங்களில் தமிழில்லை என்கிறபோது இது விடுதலைப் பெற்ற ஒரு பிரதேசமா? எனக் கேட்கிறோம்.

புதுச்சேரி யூனியனின் ஆட்சி மொழி தமிழே என 1965ஆம் ஆண்டில் சட்டம் போட்டு, குடியரசுத் தலைவரால் ஒப்புதல் பெறப்பட்ட ஆட்சி மொழித் தமிழைப் பயிற்று மொழியாக்காமல் புறக்கணித்தல் என்பது சட்ட விரோதமானது. புதுவை அரசும், அரசின் அனைத்துத் துறையினரும் இதற்குப் பொறுப்பாவார்கள். புதுச்சேரி மாநிலத்தின் தலைமை நிருவாகியாக இருந்துகொண்டு, மத்திய அரசின் அனைத்து அதிகாரங்களையும் கையாளுகிற துணை நிலை ஆளுநர் அவர்கள் தம்மை ஒரு தமிழச்சி என்றும், தமிழ் உணர்வு உள்ளவர் என்றும் அடிக்கடிக் கூறி வருபவர் என்கிற நிலையில் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் தமிழைக் கட்டாயமாக்க வேண்டி அதற்கான முயற்சிகளை உடனடியாகத் தொடங்கிட வேண்டுகிறோம்.

தூ. சடகோபன்
புதுச்சேரித் தன்னுரிமை கழகம்
புதுச்சேரி

# எமது சிறப்பாசிரியர்

# பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் அவர்களுக்கு கலைமாமணி விருது

புதுவை அரசு கலை பண்பாட்டு துறை சார்பில் கடந்த 1997-ம் ஆண்டு முதல் இயல், இசை, நாடகம், நடனம், ஓவியம், சிற்பம், நாட்டுப்புற கலை ஆகிய 6 துறை களைச் சேர்ந்த கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் கலைமாமணி விருது வழங்கப் படுகிறது.

கடந்த 2016-ம் ஆண்டு 2010, 2011 மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டன. அதன் பிறகு கடந்த 10 ஆண்டுகளாக விருதுகள் வழங்கப் படவில்லை.புதுவை கலை பண்பாட்டுத் துறை அமைச்சர் சந்திர பிரியங்கா அவர்கள் தலைமையில் நடை பெற்ற தேர்வு கூட்டத்தில் பெறப்பட்ட 743 விண்ணப்பங்களில் 216 கலைஞர்கள் கலைமாமணி விருதுக்கு தேர்வுக்கு செய்யப் பட்டனர். இயல் பிரிவில் நாராயணசாமி, நமச்சிவாயம், பாஞ்.ராமலிங்கம், பூபதி, பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட 44 பேரும் இசை பிரிவில் கந்தசாமி, அன்னபூரணி, தமிழரசன், ராஜரத்தினம், ஜெயா, தருமு, ராஜ்முகில் உள்ளிட்ட 38 பேரும் நாடகப் பிரிவில் முனுசாமி, ஏழுமலை, கலியபெரு மாள், ஜெயபாலன், ஆனந்த கிருஷ்ணன், நாகசுப்பிரமணியன் உள்ளிட்ட 39 பேரும் நடனப்பிரிவில் ரகுநாத், ராகினி, சீனிவாஸ், சங்கீதா தாஸ், ரஷ்யா, தலியா சகாயராஜ், ஆனந்த பால யோகி பவானி உள்ளிட்ட 21 பேருக்கும் ஓவியம் மற்றும் சிற்ப பிரிவில் சுப்பிரமணியன்,அழகுமுத்து,மாசிலாமணி, காந்தா, ராஜராஜன், தட்சி ணாமூர்த்தி உள்ளிட்ட 35 பேருக்கும் நாட்டுப்புறக் கலை பிரிவில் வீரப்பன், கலியமூர்த்தி, காத்தமுத்து, சாமிகண்ணு, முத்துலிங்கம், ஞானமூர்த்தி உள்ளிட்ட 38 பேருக்கும் என மொத்தம் 216 பேருக்கு கலைமாமணி விருது வழங்கப்பட உள்ளது.

இதற்கான விழா 29.04.2023 பாவேந்தர் பிறந்த நாளில் கம்பன் கலையரங்கில் நடைபெற்றது. விழாவில் துணை நிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சவுந்தரராஜன் முதல்-அமைச்சர் ரங்கசாமி ஆகியோர் விருதாளர்களுக்கு விருதுகளை வழங்குகினர். விழாவில் சபாநாயகர் ஏம்பலம் செல்வம் அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்றனர்.

## பேராசிரியர் பாஞ் இராமலிங்கம்

பேராசிரியர் பாஞ் இராமலிங்கம் (03.031960)புதுவைப்பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். தற்பொழுது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்பு தலைவராக உள்ளார். இவ்வி இயக்கத்தின் வளர்ச்சிக்காக பல்லாற்றானும் உதவி வருகின்றார். இவர் இந்திய கிளையின் சிறப்புத் தலைவராகவும் உள்ளார். 1986 ஆம் ஆண்டில் தமது 26 வயதில் முதல் நூலை வெளியிட்டு இவருக்கு இன்று வயது 63 உளவியல், கல்வியியல், மருந்தியல், அறிவியல், இலக்கியம், முதியோர் கல்வி, புதுச்சேரி வரலாறு, போன்ற பல்வேறு துறைகளில் 70 நூல்களை தமிழ் ஆங்கிலத்தில் எழுதி யுள்ள இந்த சாதனையாளர் பல பொறுப்பு களையும் சிறப்புகளையும் பெற்றுள்ளவர்.

## ஆங்கில மாதங்கள்

முப்பது நாள் ஜுன், செப்டம்பர்,
முடியும் ஏப்ரல், நவம்பரோடு!
அப்புறம் முப்பத்(து) ஒன்றனைத்தும்!
ஆனால் பிப்ர வரிமட்டும்
செப்புக இருபத் தெட்டென்றே!
திரும்ப நான்காம் ஆண்டினிலே
ஒப்பும் இருபத் தொன்பதென்றே!
உரைத்திடு அதுதான் லீப் ஆண்டே!

- மு.மு

இந்த மாதத்திற்கு முப்பது நாளா? முப்பத்தொன்றா? நாள்காட்டியைப் பார், கைபேசியைத் தேடு என்று கவலைப்படுவோருக்கு இது உதவலாம். என் பள்ளிநாட்களில் ஆங்கிலப் புத்தகத்தில் பயின்ற கவிதையின் கருத்தாக்கம்.

# புதுச்சேரி சிந்தனையாளர்கள் பேரவை.

பதிவு எண்: 639/09

புதுச்சேரி - 05

அறிக்கை

மின்னஞ்சல் / புலனம் / முகநூல் / Instagram

அனைவருக்கும், வணக்கம்.

சென்னை,

கலந்துரையாடுவோம் குழு:

பேரா. மாநிலத்தமிழ் எழுத்தாளர் சங்கம் மலேசியா. புதுச்சேரி

சிந்தனையாளர்கள்பேரவை.

ஆகியவை இணைந்து குவியம் (ஜூம்) செயலியில் 21.02.2023 மாலை உலகத்தாய்மொழி நாள் உலகலாவிய கருதரங்க நிகழ்வை நடத்தின.

"தலைநிமிர வைக்கும் தமிழ்வழிக் கல்வி" எனும் இக்கருத்தரங்கிற்கு வருகை புரிந்தோரை சென்னை, கலந்துரையாடுவோம் குழுச் செயலவை உறுப்பினர் தமிழ்த்திரு. நன்னன்குடி வேண்மாள் வரவேற்றார், இவ்வமைப்பின் நிறுவனர் பொறிஞர் பேராசிரியர், தமிழியலன் நிகழ்வுக்குத் தலைமையேற்றார்.

புதுச்சேரி சிந்தனையாளர்கள் பேரவைத்தலைவர் கவிஞர்.புதுவை கோ.செல்வம், நோக்க உரையாற்றினார், புதுவைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர். பாஞ். இராமலிங்கம். புதுச்சேரி. தமிழ்மாமணி மன்னர் மன்னன் படைப்பாளர்கள் அறக் கட்டளை பொதுச்செயலர். கவிமாமணி. வை. இராமதாசுகாந்தி. மலேசிய நாட்டின் பேரா. மாநிலத் தமிழ் எழுத்தாளர் சங்க செயலவை உறுப்பினர். தமிழ்த்திரு. சித பழனியம்மாள் பெரியசாமி, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தொடர்ந்து, "மலேசியத்தமிழர்களின் நற்றமிழ் முன்னெடுப்பு" என்றத் தலைப்பில் மலேசியா. பேரா. மாநிலத்.தமிழ் எழுத்தாளர் சங்கத்தலைவர், முனைவர்.மோகன்குமார் செல்லையா, "மலேசியாவில் தமிழர் குடியேற்றமும் தொடக்க நிலைத்தமிழ்கல்வியும். என்றத் தலைபில் மேலேசியாவின் பேராமாநிலம், ஈப்போ ஆசிரியர் கல்விக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர், முனைவர். குணசீலன் சுப்ரமணியம், மலேசிய "உயர் கல்விக்கழகங்களில் தமிழ்க்கல்வி" என்றத்தலைப்பில் மலேசிய நாட்டின் பேரா. மாநிலம் ஈப்போ ஆசிரியர் கல்விக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர், முனைவர். பழனி கிருஷ்ணசாமி,. ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். உலகெங்குமிருந்து ஏராளமானத் தமிழர்கள் இதில் பங்கேற்றனர்.

தொடர்ந்து: அ) புதுச்சேரி மாநிலத்தில் அரசு உடனே தமிழ்வளர்ச்சித்துறை அமைக்க வேண்டும். ஆ) பள்ளித்தொடக்கக்கல்வி முதல், உயர்நிலை மற்றும் தொழிற்கல்வி, உட்பட தமிழில் புதுச்சேரியில் நடத்தப்பட உடனே அரசாணை பிறப்பிக்கப்பட வேண்டும். இ) புதுச்சேரி அரசில் தமிழில் அல்லது தமிழைப் பாடமாகப் பயன்ற சான்றிதழ் உள்ளோருக்கே அரசுப் பணிகள் வழங்கப்படும் எனும் அரசாணை உடனே வெளியிடப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

நிறைவாக புதுச்சேரி சிந்தனையாளர்கள் பேரவை சிறப்புத்தலைவர் தமழ்த்திரு. எச்.வீரசேகன் நன்றியுரை நல்கினார்.

அருமையானதொரு இத்தகு நிகழ்வு சிறப்புடன் இணைய வெளியில் காணொளியில் அரங்கேற ஒத்துழைப்பு நல்கிய மற்றும் கருத்தாளர்களாக, பார்வையாளர்களாக பங்கேற்றுச்சிறப்பித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இதயபூர்வமான நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.


நன்றி

22.02.23

கவிஞர். புதுவை.கோ.செல்வம்.

தலைவர், பு.சி.பே.

## கலைமாமணி பாஞ். இராமலிங்கம் அவர்களுக்குப் பாராட்டுப்பா



படகாடும் கடலாடும் அலை மேலே
பல்கலைக் கழகச் சோலை மேலே
பரவி எழும் பரிதியே பண்பாளர் பாஞ்.

நிமிர்ந் தெழுந்து நெறிகாட்டும் போது
நீலவானம் தொடும் முனைவர் பாஞ்.
அமிர்த மாலைப் பொழுதில் ஆனந்த ஒளியாக
அழகு மஞ்சள் நிலவே, அமைதி பாஞ்.

அல்லும் பகலும் அயராத உழைப்பே
வெல்லும்திறமே, சொல்லில் அறமே பாஞ்.
செய் தொழில் என்பது வினைத்தொகை
பாஞ் இராமலிங்கமும் வினைத்தொகையே

பாஞ்சசன்யம் இராமலிங்கம் பாயும் இராமலிங்கம்
பாய்ந்து கொண்டே இருக்கும் இராமலிங்கம்
புதுவை பல்கலைக் கழகத்துக்கே வெளியே வங்க கடல்
உள்ளே முனைவர் இராமலிங்க மனோதத்துவக்கடல்

பாஞ்சாலன் பவுனம்பாள் செல்வரே வாழ்க
மங்கையர்க்கரசி மணாளரே வாழ்க,
ஓங்குபுகழ் ராஜராஜனை ஈன்றவரே வாழ்க,
தங்கத்தமிழ் அமுதரசி தந்தையே வாழ்க,
மனோ தத்துவ வித்தகரே, வாழ்க! வாழ்க!!

கலைமாமணி பாஞ் என்றுமே
இமயமலை மாமணியே – உமை
ஈன்ற புதுவை இறுமாந்து
சூட்டிய மகுடம் மகத்துவமானது!

வாழ்க நீவீர் பல்லாண்டு பல்லாண்டு!
வளர்க தங்கள் பல்கலைத் தொண்டு!!



**அன்புடன்**
**N. ராமதாஸ் FCA**
**மேலாண் ஆணையர்(வணிக வரி)**
**புதுவை.**

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
## International Movement for Tamil Culture
இலண்டன் தலைமையகம் / London Headquarters
Non-profitable Organisation / இலாப நோக்கற்ற அமைப்பு
Incorporation Number in UK. 12673950
10 Palmerston Road, Harrow, Middlesex, HA3 7FA, United Kingdom.
Web : www.imtc.uk Email: imtccanada@gmail.com Tel. 00442084225892


வழக்கறிஞர் அமுது இளஞ்செழியன்
தலைவர்,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
லண்டன் தலைமையகம்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 16வது பன்னாட்டு மாநாடு, மொரிசியசு பல்கலைக்கழகத்தில் 2023 செப்டம்பர் மாதம் 24 முதல் 26 வரையில் நடைபெறுவதை ஒட்டி நான் மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கிறேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவராக ஆடி மாதம் 11ஆம் தேதி திகதி 2019 ஆம் ஆண்டு, சுவிற்சர்லாந்து நாட்டில் நடத்தப்பட்ட ஒழுங்காற்றுக் கூட்டத்தில் ஒருமித்த கோரிக்கைக்கு இணங்கி தலைமை பதவியை ஏற்றுக் கொண்டேன்.

2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பொருளாளர் திரு. மாவை சோ தங்கராஜா கண்ணீருடன் என்னை அணுகினார். தன்னை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தில் இருந்தும் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டதாக என்னிடம் கூறினார். அவர் நியாயமற்ற முறையில் முன்னாள் தலைவர் துரைராஜா மற்றும் உறுப்பினர்கள் நடவடிக்கை மூலம் பணி நீக்கம் செய்யப்பட்டதாக என்னிடம் புகார் செய்தார். அவர் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்திற்கு ன் செய்த சேவைகளைப் பற்றி என்னிடம் கூறினார். நான் சட்ட நிபுணர் என்ற வகையில் உடனடியாக நடவடிக்கை எடுத்தேன்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு தவறானது அவரை மீண்டும் இயக்கத்தில் அமர்த்த வேண்டும் என்று சுவிற்சர்லாந்து நாட்டில் நடத்தப்பட்ட ஒழுங்காற்றுக் கூட்டத்தில் நான் பரிந்துரை செய்து, திரு.மாவை சோ.தங்கராஜாவை, உறுப்பினர்கள் சட்ட விதி முறைகளின் படி மீண்டும் இயக்கத்தில் அமர்த்த ஆடி மாதம் 2019-ல் நடவடிக்கை எடுத்தேன்.

2019 ஆம் ஆண்டு ஆடி 11 ஆம் திகதி ஸ்விட்சர்லாந்தில் நடந்த பேரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய உலக தமிழ் பண்பாட்டு மாநாடு 6 ஆம் - 7 ஆம் திகதிகளில் மாசி 2020 ஆம் ஆண்டு புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நடத்த தீர்மான முடிவுடன் அகில உலக பேரவை கூட்டமும் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இவ் இயக்கம் தடம் புரண்டு வேகமாக சென்று கொண்டிருந்த நேரத்தில் அதை இடைநிறுத்தி இந்த இயக்கத்திற்காகச் சில சீரமைப்புகளை ஏற்படுத்த வேண்டிய அவசிய

நிலையில் நான் சட்ட நிபுணர் என்ற வகையில் எனது கடமையை செய்து அப்போது ஏற்பட்ட சில சிக்கல்களும் சவால்களுக்கும் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் மீண்டும் இந்த உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை சீராக்கி நேரான பாதையில் கொண்டு போவதற்கு ஏற்ற சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டேன்.

இதன் ஒரு படியாக இந்த இயக்கத்தின் பொருளாளர் திரு.மாவை சோ.தங்கராஜா சின்னத்தை பெற இங்கிலாந்தில் பதிவு செய்து, அந்த இயக்கத்தின் சின்னத்தையும் அதன் பெயரையும் சட்ட முறைப்படி புதுச்சேரி பேராசிரியர் பாஞ். இராமலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

கனடாவிலே பதியப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பதிவைக் கோப்பரேசன் கனடாவில் உத்தரவுக்கு அமைய அதில், இந்த இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்களை படிதலுக்கு அமர்த்திய யாப்பை முன்னாள் செயலாளர் மறைந்த ரவிச்சந்திரன் மூலம் பதிந்து, அதன் மூலம் இந்த இடத்திற்கு ஓய்வு இல்லாமல் பாடுபட்டு வேலை செய்தவர்களை இயக்கத்தின் தூண்களாக மாற்றி அவர்களை உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நேரான பாதையில் தடம் புரளாமல் செல்ல ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் 2020இல் லண்டன் மாநகரில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளுக்கு எனக்கு பக்க பலமாக உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சிறப்புத் தலைவர் பேராசிரியர் பாஞ் இராமலிங்கம், திரு.மாவை சோ.தங்கராஜா ஆகியவர்கள் தங்கள் முழு முயற்சியை செலவிட்டு என்னுடன் சேர்ந்து உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பெயரையும் புகழையும் பாதுகாத்து அதை சிறப்பாக நிலைநாட்டினார்கள்.

49 ஆம் வருட காலம் இயங்கும் ஓர் இயக்கம் மிகவும் பழமை வாய்ந்த மிகவும் அனுபவம் மிக்க ஒரு இயக்கம். இந்த உலக அளவில் சுடர் விளக்காய் இருந்து வெளிச்சம் கொடுத்துக் கொண்டு, தமிழ்,மொழி , பண்பாடு, விழிப்புணர்ச்சிகளை தமிழர்களிடையே தூண்டிட்டு அதை மென்மேலும் சிறப்பு படுத்தி அதன் தூய்மையை உணர்வுகளை ஊக்கப்படுத்தி கொண்டு செல்லும் ஓர் இயக்கமாகச் சேவை செய்வதில் நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

இந்த 16ஆவது உலகத் தமிழ் பண்பாட்டு பன்னாட்டு மாநாடு மொரிசியசு பல்கலைக் கழகத்தில் சிறப்பாக நடைபெற வேண்டும். மொரிசியசு நாட்டின் தொடக்கம், முதல் முதலில் தமிழர்களை கொண்டு கட்டமைக்கப்பட்ட மண். இந்த மண்வாசனை திருவள்ளுவரின் வாக்குக்கு ஏற்பும் கணியன் பூங்குன்றனாரின் கூற்றுக்கு ஏற்ப "யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உலகம் எங்கும் வீசும். ஒவ்வொரு தமிழரும் உலகத் தமிழ் பண்பாட்டு மாநாட்டு மண் வாசனையை சுவாசிக்க வேண்டும். இதை மனம்விட்டு மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

13வது உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு, 1974 ஆம் ஆண்டு ரத்தம் சிந்திய தமிழ் மண்ணில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 2017இல் நடைபெற்று, அந்த மாநாட்டில் எடுத்த தீர்மானங்களுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கு மாவை சோ.தங்க ராசா, பேராசிரியர் பாஞ். இராமலிங்கம் ஆகியோரின் அயராது உழைப்புடன் செயல்படுத்தினார்கள்.

2020 ஆம் ஆண்டு உலக தமிழ் பண்பாட்டு மாநாடு 6 ஆம் - 7 ஆம் திகதிகளில் மாசி புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் தீர்மான முடிவுடன் அகில உலக பேரவை கூட்டமும் கூட்டப்பட்டது. அதற்கு அமைய 5ஆம் திகதி மாசி மாதம் 2020-ல் புதுவை பல்கலைக்கழகத்தில்

தீர்மானிக்கப்பட்டது. இயக்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் சட்ட விதிகள் படி 2017 ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தீர்மானங்களின்படி நிறைவேற்றப்பட்ட யாப்பு திருத்தம் மேற்பார்வையில் இவ்வியக்கம் இயங்கும் என 2020இல் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டல் முடிவு செய்யப்பட்டது.

2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் தெள்ளாரில் நடைபெற்ற மாநாட்டில், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தனது பணிகளை உலகம் முழுவதும் நிறைவேற்றுவது என்றும் மொரிஷியஸில் பொன்விழா தயாரிப்பு மாநாடு மற்றும் இலங்கை வவுனியாவில் 50வது பொன்விழா மாநாட்டை நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் வாழ்கின்ற தமிழ் மக்களை ஒன்றிணைந்து உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் நடத்தும், மாநாடு தமிழரின் மொழி பண்பாடு, கலாச்சாரம்,ஆகியவற்றின் தன்மை போற்றி காத்து புலம்பெயர்ந்து வாழும் தமிழன் தங்களின் இளைய தலைமுறைகளுக்கு தமிழ் மொழியின் பெருமையும் தமிழ் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் எடுத்துரைத்து வளர்த்து

“கல் தோன்றி மண் தோன்றக் காலத்தே
முன்தோன்றிய மூத்த குடி” குறள்

என்ற பெருமை நிலை நாட்ட வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்கிறேன்.

மொரிசியசு நாட்டில் நடைபெறும் இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற உதவிய உலக தமிழ் பண்பாட்டு இயக்கம், இந்தியா, பன்னாட்டு புலம் பெயர்ந்தோர் சங்கம், இங்கிலாந்து எழுமின் அமைப்பு, மொரிசியசு மற்றும் மொரிசியசு முருகன் கோவில் அறக்கட்டளை, அத்துடன் மொரிசியசு குடிமக்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

**அமுது இளஞ்செழியன்**
அகில உலகத் தலைவர்,
உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்,
லண்டன் தலைமையகம்




உலகின் தலைசிறந்த 100 புத்தகங்களில், இந்திய எழுத்தாளர் எழுதிய ஒரு புத்தகம்கூட இடம்பெறாதது வருத்தம் அளிக்கிறது!

தில்லியில் நடைபெற்ற 11வது புத்தகக் கண்காட்சியைத் தொடங்கி வைத்த அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் ஐயா அவர்கள் கூறியது.

(இன்று இந்த நிலை மாறியிருந்தால், அறிந்தவர் அடுத்த இதழுக்கு எழுதி அனுப்பலாம் -ஆசிரியர்)

# மொரீசியசு நாட்டில் மூன்று நாள் மாநாடு




**(2023 - செப்டம்பர் 24,25,26)**



**31 நாடுகளிலிருந்து பேராளர்கள் பங்கேற்கிறார்கள்.**
**கருத்தரங்குகள் – பாட்டரங்கம் – கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.**

முனைவர். **ஆறுமுகம் பரசுராமன்,** மேனாள் கல்வி அமைச்சர் –மொரீசியசு,
திரு. **தேவராசு பொன்னம்பலம்** அரசு முதன்மை வழக்கறிஞர்–மொரீசியசு,
முனைவர் **பாஞ். இராமலிங்கம்**
சிறப்புத் தலைவர், உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம், இந்தியா
மற்றும் **மாநாட்டுக் குழுவினர் அழைக்கிறார்கள்.**

தமிழ்ப்பணியாற்றிய பன்னாட்டுத் தமிழறிஞர்களுக்கு **'உலகத் தமிழ்மாமணி - வைரத்தமிழர்'** விருதுகள் வழங்கப்படுகின்றன.

**மாநாட்டுப் பதிவுக் கட்டணம் - 400 அமெரிக்க தாலர்கள்** (பதிவுக் கட்டணத்தில் மாநாடு நடைபெறும் மூன்று நாட்களுக்கு உணவு மற்றும் எளிய தங்குமிடம், ஒரு மாநாட்டு மலர் மற்றும் மொரீசியசில் உள்ளூர் போக்குவரத்து ஆகியவை அடங்கும்.

வாருங்கள் தமிழர்களே! மாநாட்டில் சந்திப்போம்!! வருங்காலத் தமிழினத்தின் விடியலுக்குச் சிந்திப்போம்!

**பேராளர் கட்டணம் செலுத்த வேண்டிய வங்கி :**

பெயர் : உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
(Vulaga Thamizh Panpattu, Iyakkam)
வங்கி : இந்தியன் வங்கி, இலாசுப்பேட்டை, புதுச்சேரி-8.
(Indian Bank, Lawspet)
சேமிப்புக் கணக்கு எண் : 6382758806.

**பதிவு, பயண விவரங்கள் தொடர்புக்கு:**

பேராசிரியர் பாஞ். இராமலிங்கம்
மாநாட்டுச் செயலாளர்,
இயக்குநர் - மனிதவள மேம்பாட்டு மையம்
புதுச்சேரி பல்கலைக் கழகம் - இந்தியா
மின்னஞ்சல் : imtcuk2020@gmail.com
பேசி : 94433 52476

## உலகத் தமிழ்க் கழகத்தில் உறுப்பினராவீர்!

உறுப்பினர் கட்டணம் - உருவா 150/-

தன்மானத்தோடு தமிழ்மானங்காக்கத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் அமைப்பு இது. ஊர்தோறும் கிளை அமைப்போம்! பார்முழுதும் பாவாணர் கருத்துகளைப் பரப்புரை செய்வோம்! வீழ்ந்து கிடக்கும் தமிழினத்திற்கு விடியலைக் காட்டுவோம்!

உ.த.க உறுப்பினர் படிவமும் தொகையும் அனுப்பிப் பதிவுசெய்யவும், பாவாணரின் முதன்மொழி ஏட்டிற்கு ஆண்டுக்கட்டணம் பதிவிற்கும், செய்திகள் அனுப்பவும்.

**தொடர்பு முகவரி :**
**செ.சி.இளந்திரையன், பொதுச் செயலாளர் - உ.த.க,**
**5/66, செல்லியம்பாளையம், மின்னாம்பள்ளி அஞ்சல்,**
**சேலம்-636 106. பேசி : 99438 37310.**

உலகத் தமிழ்க் கழகத்தின் ஒப்பற்ற ஒரே செய்தி ஏடு

## பாவாணரின் முதன்மொழி

(இருதிங்களிதழ்)



உலகத் தமிழ்க் கழக நடப்புச் செய்திகளை உள்ளது உள்ளபடித் தாங்கிவரும் தனித்துவமிக்க ஏடு ! தமிழுக்காக ஓங்கிக் குரல் கொடுக்கும் இவ்வேட்டைத் தாங்கிப் பிடிக்க வாருங்கள் !

**உறுப்பினராவீர் !**

| | |
|---|---|
| ஆண்டுக்கட்டணம் | - உருவா 120/- |

**விளம்பரம் செய்வீர்!**

| | |
|---|---|
| அட்டைப் பின்பக்கம் கட்டணம் | - உருவா 6000/- |
| அட்டை உள் பக்கம் கட்டணம் | - உருவா 4000/- |
| சாதாரண உள்பக்கம் கட்டணம் | - உருவா 3000/- |

**எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதே நமது உயிர்மூச்சு!**


SUITE2, 106 TO 110
புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமன்றம்
நடத்தும்
கல்லூரி மாணவர் - மாணவியருக்கான